Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 13
இதழ் 29
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 26 முஹறம் 12 புதன்கிழமை (10-3 71)

விஜயாஸ் நீலசோப்




மேலுறைகளை
சேர்த்து
அனுப்பி
பின்வரும்
பரிசுகளைப்
பெறுங்கள்

300 லேபலுக்கு 1 கண்ணாடி அல்லது
1 சியல் பேனா
50 லேபலுக்கு 1 சாக்குப்பை
25 லேபலுக்கு 1 மூவர்ணப் படம்

முருகானந்தா
குடிசைக் கைத்தொழிற்சாலை
முகமாலை — எழுதுமட்டுவாள்.

# 'எந்த நிலைமையையும் சமாளிக்கத் தயார்!'

## சேகுவேரா பயமுறுத்தல்: பிரதமர் எச்சரிக்கை

### யு.என்.பி. தொடர்புபற்றியும் பிரஸ்தாபம்

கொழும்பு, செவ்

ஐக்கியதேசியக்கட்சியின் ஒரு பகுதியையும், சேகுவேரா இயக்கத்தையும் சம்பந்தப்படுத்தி பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா முதல்தடவையாகப் பேசினர் தான் ஒரு பெண்ணாக இருந்தாலும், எந்த இக்கட்டான நிலைமையையும் சமாளிக்கத்தயாராக இருப்பதாகவும் கூறினர்.

கொழும்பு நகரமண்டபத்தில் நடந்த சர்வதேசபெண்கள் தினவிழாவில் பிரதமர் பேசும்போதே இந்தத் தகவலை வெளியிட்டார்.

இவ்வளவு காலமும் வலதுசாரி இயக்கங்களுடன் மறைமுகமாகத் தொடர்புபடுத்திப் பேசிவந்த பிரதமர் நேற்று முதல் தடவையாக யு. என். பி யுடன் சம்பந்தப்படுத்திப் பேசினர்.

கடந்த காலங்களில், பிரதமர் சேகுவேரா இயக்கத்தினருடன் வலதுசாரியினருக்கு தொடர்பு இருப்பதாகவும். பிற்போக்குவாதிகளுக்கு தொடர்பிருப்பதாகவும் கூறிவந்தார். நேற்று முதல் தடவையாக ஐக்கிய தேசியக்கட்சியின் ஒரு பிரிவினருக்குத் தொடர்பிருப்பதாக தெரிவித்தார்.

சேகுவேரா இயக்கத்திலுள்மிரண்டுபோய், அமைதி இழந்திருக்கும் இளைஞர்களை பயன்படுத்திக் கொள்ள யு.என்.பியுடன் சிலசக்திகள் முயற்சி செய்கின்றன என்றும்பிரதமர் சொன்னர்.

பிரதமர் மேலும் பேசுகையில், அமைதியைப் பின்பற்றும் மக்களும் பௌத்த மதத்தைப் பின்பற்றி அதன் வழிப்படி நடந்துவரும் மக்களும் இரத்தக்களரிமூலம் நாட்டில் மாற்றம் ஏற்படுவதை அனுமதிக்கமாட்டார்கள் என்ற திடமான நம்பிக்கை எனக்குண்டு நான் ஒரு பெண்ணாக இருந்தபோதும், நானும் அரசாங்கமும் எந்த நிலைமையையும் சமாளிக்கத் தயாராகவுள்ளோம்'' என்றார்.

### 325தொன் உள்ளி இறக்குமதி

கோட்டை, செவ்

உள்ளித் தட்டுப்பாட்டை நீக்கும்பொருட்டு 325 தொன் உள்ளி இறக்குமதி செய்யப்படவிருக்கிறதென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சலவைத் தொழிலுக்கான

## பாவனைப்பொருள்கள் தட்டுப்பாடு: தூதுக்குழு முறையீடு

யாழ்ப்பாணம், புதன்

சலவைத் தொழிலுக்கான பாவனைப் பொருட்களின் தட்டுப்பாட்டுக்குரிய காரணத்தை விசாரித்து தெரிவிக்கும்படி யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் திருவிமல் அமரசேகரா சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்துள்

(8ம் பக்கம் பார்க்க)

தூதரகத்தில்நடந்த கத்திகுத்து

## இன்ஸ்பெக்டர் மரணம்

கோட்டை, செவ்வாய்

அமெரிக்க ஸ்தானிகராலயம் தாக்கப்பட்டபோதுகத்திக்குத்துக்கு இலக்கான இன்ஸ்பெக்டர் ஈ பி கருணரத்தின நேற்று கொழும்பு பெரியஆஸ்பத்திரியில்மரணமானர்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் கருணரத்தின ஸ்தானிகராலயத்தின் முன் பொலிஸ் கன்ஸ்டபிள் ஒருவர் தாக்கப்பட்டதை தடுக்கச் சென்றபோதே கத்திக் குத்துக்கு ஆளானர். உடனடியாக பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்று மரணமானர்.

# பிள்ளைகளுக்கு நஞ்சூட்டி தனது கழுத்தை தானே வெட்டினர்

## மகன்மரணம்; மகளும் தந்தையும்கவலைக்கிடம்

யாழ்ப்பாணம் புதன்

பிள்ளைகளுக்கு கிருமிநாசினி அருந்தக்கொடுத்து தானும் பிளேட்டால் கழுத்தை அறுத்து தற்கொலை செய்ய முயன்றவர் ஆபத்தான நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த கணபதிஎன்ற நபர் தனது 14வயது குணசிங்கம் என்ற மகனுக்கும்17 வயது சந்திரா என்ற மகளுக்கும் கிருமிநாசினி அருந்தக் கொடுத்தார் குணசிங்கம் கிருமிநாசினிக்குப் பலியானர். சந்திரா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் பிளேட் காயங்களுடன் கணபதி யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சீட்டுத்தகராறைத் தொடர்ந்தேமேற்படிசோகசம்பவம் நிகழ்ந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

## பொலிஸ் பாதுகாப்புடன் ஜி. சி. ஈ. பரீட்சை

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் 14ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் க. பொ. த (சாதாரண பரீட்சைக் காலத்தில் சில தீவிர சக்திகள் பரீட்சையைக் குழப்ப உத்தேசித்திருப்பதாகவும், பரீட்சை மண்டபங்களுட் புகுந்து கலாட்டா செய்யவிருப்பதாகவும் தமக்குச் செய்திகள் எட்டியுள்ளதாகக் கூறும் அவசர சுற்றுநிருபமொன்று சகல பரீட்சாதிகாரிகளுக்கும், அதிபர்களுக்கும் கல்வித் திணைக்கள உயர் பீடத்திலிருந்து கிடைத்துள்ளது. பரீட்சை மண்டபங்களில் போதிய பொலிஸ் பாதுகாப்பு இருக்குமென்றும். சந்தேகப் பேர்வழிகள்பற்றி உடனுக்குடன் பொலிசுக்கு அறிவித்து ஒழுங்கை நிலைநாட்ட உதவுமாறும் சகல அதிபர்களும் கேட்கப்பட்டுள்ளனர். எக் காரணத்தைக் கொண்டும் பரீட்சையை நடக்க விடாது செய்யக் கூடாதென்றும், இவ் விஷயத்தில் அலட்சிய மனோபாவம் இம்மியும் இருப்பது ஆபத்தை வரவழைப்பதாக இருக்கலாமென்றும் அச் சுற்று நிருபம் மேலும் தெரிவிக்கிறது.

(மறுநி)

## 'எவற்றிலும் உண்மை காண்போம் அமைதி அதனுல் பிறக்கும்'

—திருமதி விமலாதாகர்

— ஞ. வி மகாலிங்கம் —

யாழ்ப்பாணம், புதன்

"ஆத்மீகத்தின் உண்மையையும், தத்துவங்களையும் இன்றைய அரசியல், பொருளாதாரம், கல்வி இவற்றினூடே கண்டு அனைவரையும் இணைக்க முற்படுவதையே எமது பணியாகக் கொண்டுள்ளோம்" இவ்வாறு நேற்றுமாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அன்பு மனித ஒற்றுமையின் சுதந்திரம் என்ற பொருள்பற்றிப் பேசும்போது திருமதி விமலாதாகர் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் பேசும்போது குறிப்பிட்டவை: மனிதனை மனிதன் அறிய வேண்டும். மனிதவாழ்வு வாழ்வாங்கு அமைய தன்னம்பிக்கையை ஆதாரமாகக் கொள்ள வேண்டும். நல்லெண்ணமே நம்பிக்கையின் ஆதாரம். நம்பிக்கையை இழந்துவிட்டால் அழிவு நிலை வருவதைத் தடுக்க முடியாது. மனிதன் தன்னைத் தான் முதலில் நம்புதல் வேண்டும். அரசியலாலோ, பொருளாதாரத்தாலோ எவரும் சுபிட்சம் பெற்றுவிட முடியாது. எங்கும் கோளும் எரிச்சலும், கோபமுமே தாண்டவமாடுகிறது. வறுமைக்கொடுமை உலகமெங்கும் இருக்கிறது. இதற்கு தனித்து அமைதி பெறுததே காரணமாகும். புதிய ஓர் ஒற்றுமையான மையத்திலிருந்து மனிதன் வாழ வேண்டும். மனிதனை நிலைப் படுத்துவது சமயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**MANOHARA**
Jaffna
Daily 4 Shows
David Niven - Eli Wallach
in
**THE BRAIN**
A Thinking Thief ' s Movie
(Technicolor - Franscope)

**REGAL - Jaffna**
Daily 3 shows
Poya days 4 Shows
George Kennedy
in
**GUNS OF THE MAGNIFICENT SEVEN**
(Technicolor)

6வது வாரம்
**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி 3-30, 6-30, 9-30
ஏ.வி.எம் ராஜன்-சாரதா
நடித்த
**துலாபாரம்**

## அமைச்சரைப் பேட்டி

ஊர்காவற்றுறை, திங்கள்
சரவணை நாகேசுவரி வித்தியாசாலையைத்தரம்உயர்த்தக்கோரி உதவிக்கல்வி மந்திரியை சரவணை - தூதுக்குழுவொன்று பேட்டி கண்டது. திரு துளசிகாமணி தலைமையில் சரவணை சேவா மன்றப்போஷகர் திரு. எஸ். எஸ். சிவம், பெற்றூர்-ஆசிரியர் சங்கக்காரியதரிசி திரு இ. நகுலேசபிள்ளை ஆகியோர் உதவி மந்திரியைப் பேட்டி கண்டனர்.

**நாகமஸ் சினிமா**
சுன்னாகம்
தினசரி 6-30 9-30
போயா நாட்கள் 2-30
எம். ஜி. ஆர்.-ராஜகுமாரி
நடித்த
**குலேபகாவலி**

கடைசி வாரம்
**வின்ஸர்**
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி - சோ
நடித்த
ஜெமினியின்
**விளையாட்டுப் பிள்ளை**

**ராணி**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேஷன்
ஜெயலலிதா
நடித்த
**எங்கிருந்தோ வந்தாள்**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - லெட்சுமி
முத்துராமன் - நிர்மலா
நடித்த
சிறந்த ஹாஸ்ய சித்திரம்
**வீட்டுக்கு வீடு**
(எஸ் வி. ஆர். பிலிம்ஸ் வெளியீடு)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 4 காட்சிகள்
ராமராவ் — சிவகுமார்
நடித்த
**மாய மோதிரம்**

கெப்பிட்டல்
(கொழும்பு)
**சிவாஜி**
**காஞ்சனா**
**எம்.என். நம்பியார்**
**நாகேஷ்**
**முத்துராமன்**
இன்னும் பலர் நடித்த


**சி**
**வ**
**ந்**
**த**
**ம**
**ண்**

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மிளகாய் பயிரிடுவதற்கேற்ற தோட்டம் ஐந்து ஏக்கர் துண்டுகளாகப் பிரித்து விற்கப்படும். படித்த வாலிபருக்கு ஏற்ற திட்டம். லான்ட் இன்வெஸ்ற்மென்ட்ஸ், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம், போன்: 7453
2879

புத்தூர் பிரதான வீதியில் ஏழு பரப்புக் காணியில் புதிய பெரிய வீடு, நல்ல தண்ணீர், மின்சாரம் உள. உயர்தர கலலூரி, அரசினர் மருந்துச்சாலை, தபாற்கந்தோர் அண்மையில். விலையின் ஒரு பகுதிக்கு ஈடு ஏற்றுக்கொள்ளப்படலாம். லான்ட் இன்வெஸ்ற்மென்ட்ஸ், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2877

யாழ்ப்பாண மாநகர எல்லைகளுள்ளும், நாவற்குளியிலும் வீடு கட்டுவதற்குரிய பல காணிகள் உள லான்ட் இன்வெஸ்ற்மென்ட்ஸ், 6. பிரதான வீதி, யாழ்ப்பாணம், போன்: 7453
2878

மானிப்பாய் மெமோறியல் கல்லூரி வீதியில், கல்லூரிக்கு அண்மையில் 8 1/2 பரப்புக்காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. வே. இரத்தினசபாபதி, பலாலிவீதி, திருநெல்வேலிவடக்கு.
2881

### தேவை

நாவற்குளி ஆலாத்தி வெளித்தோட்டத்தில் மாடுகள் மேச்சலுக்கு எடுக்கப்படும். விபரங்களுக்கு: நிர்வாகி, ஆலாத்திவெளித் தோட்டம். நாவற்குளி.
2883

## தோட்டங்களை தேசியமயமாக்கும் தீர்மானம் நிராகரிப்பு

கோட்டை, செவ்வாய்
தனியாருக்கும், அந்நியருக்கும் சொந்தமான தோட்டங்களைத் தேசியமயமாக்க வேண்டுமென்ற ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் ஒரு சாராரது கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

தனியாருக்கும், அந்நியர் சிலருக்கும் சொந்தமான தோட்டங்களைத் தேசியமயமாக்குவது நியாயமற்றதெனவும், அதேவேளையில் இச்செய்கை, ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு முரண்பாடாக அமையுமெனத் தோட்டத் தொழில் அமைச்சைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒரு செய்கையின் பிரதிபலிப்புகள் பற்றிச் சிந்திக்காது அரசாங்கம் அவசரப்பட்டு எந்தவித நடவடிக்கையும் உடனடியாக எடுக்கமாட்டாதெனமேலும் அப்பிரமுகர் தெரிவித்தார்.

— —

உடுவில், புதன்
சுன்னாகம் பட்டினசபை ஆதரவில் நூல்நிலைய ஆராய்வுக் குழு நடாத்தும் கருத்தரங்கில் நாளை மாலை 'மார்க்ஸிசமும் இன்றைய சமுதாயமும்' என்ற பொருள் பற்றி திரு. ஏ. எஸ். கனகரத்தினம் பேசுவார். பட்டின சபை விளையாட்டரங்கில் கருத்தரங்கு நடைபெறும்.

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
எம் ஜீ. ஆர். - பத்மினி
நடித்த
[illegible]

வலி. மத்தி ஆசிரியர் சங்க

## இசை, பேச்சுப் போட்டி

உடுவில், செவ்வாய்
வடமாகாண ஆசிரியர் சங்கத்தால் நடாத்தப்பட்ட பேச்சு, இசைப் போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு-

### ஆங்கிலப்பேச்சு

அதிமேற் பிரிவு ஆண்கள் எஸ் மகாலிங்கம் மானிப்பாய் இந்துக்கல்லூரி, எஸ். என். இராகவன் மானிப்பாய் இந்து.

மேற்பிரிவு ஏ. இராஜகாரியர் மானிப்பாய் இந்து, எஸ். விஜிதரன், மானிப்பாய் இந்து.

மத்திய பிரிவு ஆர் தர்மராஜா மானிப்பாய் இந்து, எஸ். விமலானந்தின் மானிப்பாய் இந்து. வி. கோகிலரூபன் மானிப்பாய் இந்து.

கீழ்ப்பிரிவு எஸ். சூரியப்பிரபா மானிப்பாய் இந்து. வி. பரதன் மெமோறியல் மகா வித்தியாலயம், வி. கோபிநாத்மெமோறியல் வி. இரஞ்சித்குமார் மெமோறியல்.

பெண்கள் மேற்பிரிவு எஸ். கலாவதி மானிப்பாய் இந்து மகளிர், எஸ். சுபாசினி உடுவில் இராமநாதன், எஸ். தமயந்தி மானிப்பாய் இந்து மகளிர்.

மத்திய பிரிவு எஸ். இந்திரா மானிப்பாய் இந்து மகளிர், டி. அலிஸ் எமல்டா மானிப்பாய் மெமோறியல், என். ஜெயதேவி மானிப்பாய் மகளிர். எஸ். கௌரி இராமநாதன் கல்லூரி.

கீழ்ப்பிரிவு எஸ். சாந்தினி மானிப்பாய் இந்துமகளிர், எஸ். பிரமீலா மானிப்பாய் இந்துமகளிர், ரி. தியாகராணி மெமோறியல் ஏ சிவகுமாரி இராமநாதன் கல்லூரி.

### தமிழ்ப் பேச்சுஆண்கள்

அதிமேற்பிரிவு பி. அசோகன் மானிப்பாய் இந்து கே. யோகேந்திரன் மானிப்பாய் இந்து.

மேறபிரிவு கே தெய்வேந்திரன் மெமோறியல், என் லோகேஸ்வரன் மானிப்பாய் இந்து, கே. சிவஞானசுந்தரம் மானிப்பாய் இந்து.

மத்திய பிரிவு வி. கிருபாகரன் மானிப்பாய்இந்து, வி. கோகிலரூபன் மானிப்பாய் இந்து. எஸ் பரமானந்தன் மெமோறியல்.

கீழ்ப்பிரிவு ரி. ரஞ்சித்குமார் மெமோரியல், ஜே. பிரான்சிஸ் மெமோரியல்.

பி. அருமகன் மானிப்பாய் இந்து.

மேற்பிரிவு பெண்கள் ஜே. நித்தியவதி இராமநாதன் கல்லூரி, ரி. மகாலட்சுமி இராமநாதன் கே. பத்மினி மானிப்பாய் இந்து மளிர்.

மத்தியபிரிவு: கே கலை அரசி மானிப்பாய் இந்து, ஏ சந்தானத்தலட்சுமிமானிப்பாய் இந்து, எம் தவமணி மெமோறியல்.

கீழ்ப்பிரிவு: எஸ் ரேவதி மானிப்பாய் இந்துமகளிர், கே சுனிலா மானிப்பாய் இந்துமகளிர், என் கிரிசாந்தினி மெமோரியல்.

சங்கீதம் மேற்பிரிவுபெண்கள்: எஸ் வனஜா இராமநாதன் கல்லூரி, ஆர் மீனலோசினி இராமநாதன் கல்லூரி, எம் ரோகினி மானிப்பாய் இந்துமகளிர்.

கீழ்ப்பிரிவு: கே சாந்திஇராமநாதன் கல்லூரி, எஸ் சிவசக்தி இராமநாதன் கல்லூரி, கே நாகசுலோசனு மெமோரியல்.

கூட்டுப்பாடல் மேற்பிரிவு பெண்கள்: இராமநாதன் கல்லூரி, மானிப்பாய்இந்து மகளிர், மெமோரியல் மகா வித்தியாலயம்.

கீழ்ப்பிரிவு: இராமநாதன் கல்லூரி, மெமோரியல், இந்துமகளிர்

கீழ்ப்பிவுஆண்கள் மெமேரியல்

தனிப்பாடல் கீழ்ப்பிரிவு ஆண்கள்: மெமோரியல்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 10—3—71

(செய்திகள்: காலை 6-45 பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அல்லது 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 ஆதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அல்லது 49 மீ.**

பகல் 12-00 திரை இசை, 1-00 கதம்ப இசை

**344 மீ. அல்லது 61 மீ.**

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு. 5-00 பிறந்தின வாழ்த்துக்கள், 5-30 மாணவர் மன்றம்.

இரவு 6-15 இசைப்பயிற்சி 6-30 நாட்டுப்பாடல்கள், 6-40 வீட்டு வைத்தியம், 7-00 வாத்திய இசை, 7-15 வயலின், 7-45 குறள் இசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்தித் தொகுப்பு.

## புதிய நிர்வாகிகள்

ஊர்காவற்துறை, செவ்
மேலைக் கரம்பொன் ஆனந்தா சனசமூக நிலையத்தில் வருடாப்தக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்ற போது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. நா. செல்லையா உப. தலைவர், திரு. வ. நாகரத்தினம் செயலாளர். திரு. சங்கர சிவசம்பு உப செயலாளர் திரு செ. இராமக்கிருஷ்ணன் தனாதிகாரி திரு. க. ஆசைப் பிள்ளை நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

0 0 0

உடுப்பிட்டி, செவ்
சரவெட்டி சிந்தாமணி விநாயகர் சனசமூக நிலைய மாணவர் மன்ற நிர்வாகிகளாகப்பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டனர்:-

போஷகர்: திரு. மு. அருமைநாயகம் தலைவர்: திரு. க. நவரெத்தினராசா செயலாளர்: திரு சி. கணேசன் பொருளாளர்: திரு. சி சிவரெத்தினம்.

0 0 0

பருத்தித்துறை, செவ்
துன்னாலை ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு எஸ். செல்வர்ராசா, உபதலைவர்: திரு. கே சிவநேசன், செயலாளர் திரு. வெ பாலசுப்பிரமணியம், உபசெயலாளர்: திரு. சண்முகநாதன், தனாதிகாரி: திரு. கே. கணேசராசா. 10 பேர்கொண்ட நிர்வாகசபை ஒன்றும், தெரிவு செய்யப்பட்டது.

......

## 5000ஏக்கரில் கெனப் புல்

கோட்டை, செவ்.
நல்லதரமான கடதாசிஉற்பத்திக்குச் சிறந்த மூலப் பொருளான 'கெனப்' என்ற ஒருவகைப்புல்லை அரசாங்கம் பொலநறுவையில் 5000ஏக்கரில் பயிரிடவிருக்கிறது. கெனப்என்ற இந்தப் புல்லு சிறந்ததெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குப் பாகிஸ்தானில் ஒத்துழையாமை இயக்கம்!

## விடுதலைக்கான போராட்டம் இது என்கிறார் முஜிபுர் ரஹ்மான்

### பாக். வானொலியில் இருட்டடிப்பு

டாக்கா, மார்ச் 9

கிழக்குப் பாகிஸ்தானில் 5 நாட்களாக நடந்துவந்த வேலைநிறுத்தம் முடிவடைந்து நேற்றுமுதல் சாத்வீக ஒத்துழையாமை இயக்கம் நடைபெறுகிறது.

அவாமி லீக் தலைவர் சேக் முஜிபுர் ரஹ்மானின் நாலம் சக்கோரிக்கை பற்றி யாஹ்யாகான் எவ்வித பதிலும் அளியாததினால் நேற்றிலிருந்து கிழக்குப் பாகிஸ்தானில் சாத்வீக ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பமாகியுள்ளது.

**வானொலி இருட்டடிப்பு**

கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெற்றுவரும் சாத்வீக ஒத்துழையாமை இயக்கம் பற்றி பாகிஸ்தான்வானொலி எவ்வித செய்தியையும் ஒலிபரப்பாது. கடந்த ஐந்து நாட்களாக கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெற்ற வேலைநிறுத்தத்தின்போது நிகழ்ந்த சம்பவங்கள் பற்றிய நீண்ட அறிக்கையை ஒலிபரப்பியது அவ்வறிக்கையில் ராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டபின் 172 பேர் கொலையுண்டதாகவும், 300க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்ததாகவும், இதில் ராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் கொலையுண்டவர்கள் 23 பேர்தான் என்றும் தெரிவித்துள்ளது.

**டாக்கா வானொலி**

ஆனால் கிழக்குப்பாகிஸ்தான் வானொலி, ஒத்துழையாமை இயக்கம்பற்றிய செய்திகளை விபரமாக ஒலிபரப்பிவருகிறது. கிழக்குப் பாகிஸ்தான் வானொலி என்றிருந்த அதன்பெயரை இப்பொழுது டாக்கா வானொலி என்று அது அழைக்கிறது.

அவாமி லீக் கட்சித்தலைவர் சேக் முஜிபுர் ரஹ்மானின் பேச்சுமுழுவதையும் இவ்வானொலிஒலிபரப்பியது அதில் இப்பொழுது நடைபெறும் போராட்டம் விடுதலைக்காக நடக்கும் போராட்டம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், கிழக்குப்பாகிஸ்தான் பல்வேறு அம்சங்கள் பற்றி விளக்கிய அவர், கடந்த தேர்தலில் வெற்றி பெற்று பாகிஸ்தான் தேசிய சட்டசபையில் பெரும்பான்மை இடங்களைப்பெற்ற தம்மிடமே முறைப்படி ஆட்சி அதிகாரம் உண்டு. அதனால் ஏதாவது நடவடிக்கையெடுக்கும்பொழுது தம்மிடமிருந்து அந்நடவடிக்கைகளுக்கு அனுமதி பெற்றிருக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், இந்த ஒத்துழையாமை இயக்கம் திட்டமிட்டமுறையில் எல்லாப் பட்டினங்களிலும் கிராமங்களிலும் நடைபெற அதை ஒழுங்குபடுத்துவதற்கு பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. கிழக்குப் பாகிஸ்தான் மக்களின் சுதந்திர வேட்கையானபோராட்டங்களை டெலிவிஷன்கள், வானொலிகள், பத்திரிகைகள் மறையாது வெளியிடவேண்டும். அப்படிஅவை வெளியிடாது மறைந்தால், அந்த ஸ்தாபனங்களில் வேலைசெய்யும் ஊழியர்கள் ஒத்துழைக்கக்கூடாது.

எம்மிடமே பெரும்பான்மைஉண்டு. எமது அதிகாரத்திற்கு கிழக்குப்பாகிஸ்தானிலுள்ள ஒவ்வொருவரும் கட்டுப்படுகிறார்கள் என்பதை அவாமி லீக்கின் கட்டளையையே நிறைவேற்றிவருகிறார்கள் என்பதை கடந்த வாரத்தில் கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெற்ற நிகழ்ச்சிகளே எடுத்துக்காட்டும் இந்தஉண்மையை ஜனாதிபதி யாஹ்யாகானும் ஸ்லாமாபாத்திலுள்ள அரசும் உணர்ந்துகொள்ளவேண்டும். இங்கு வாழ்கின்ற ஒவ்வொருவரும் சகோதரர்களே வங்காளியாய் இருந்தாலும்சரி, வங்காளி அல்லாதவராய் இருந்தாலும்சரி, இந்துவாய்இருந்தாலும், முஸ்லிமாய் இருந்தாலும் அனைவரும் சகோதரர்களே. எமது போராட்டம் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்றார்.

**பிரிட்டிஷாருக்கு ஆலோசனை**

கிழக்குப் பாகிஸ்தானில் வாழும் பிரிட்டிஷாருக்கு ஏதாவது ஆபத்து ஏற்படும் என்று கருதினால், அவர்களை மேற்குப் பாகிஸ்தானுக்கு வந்துவிடுமாறு பாகிஸ்தானிலுள்ள பிரிட்டிஷ் தூதுவரகம்கேட்டுக்கொண்டுள்ளது

இப்பகுதியில்வாழும்அமெரிக்கர்களுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை என அமெரிக்க வெளியுறவு அமைச்சு அதிகாரி தெரிவித்தார்.

**வானொலி நிலையத்தில் வெடிகுண்டு**

டாக்கா வானொலி ரஹ்மானின் பேச்சை ஒலிபரப்பியதும் அங்கு துப்பாக்கிச் சத்தம்கேட்டதாகவும், இரு மணி நேரத்தின்பின் வானொலி நிலையத்துக்கு வெளியே வெடிகுண்டுச் சத்தம் கேட்டதாகவும் ஒரு செய்தி தெரிவித்தது. வானொலி நிலயத்திற்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை எனவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

போர்த்துக்கல்

## விமானநிலையவெடிவிபத்தில் 11 விமானங்கள் அழிவு?

லிஸ்பன், மார்ச் 9

போர்த்துக்கல் தலைநகரான லிஸ்பனுக்கு 90மைல் வடக்கேயுள்ள விமான நிலைமொன்றில் வைரம்பம் எதிர்பாராமல் வெடித்ததில் விமான நிலையத்தில் நின்ற பல விமானங்கள் அழிவுற்றதாகச் சொல்லப்படுகிறது. இந்தவெடிவிபத்தினால் ஏற்பட்ட தீயை அணைப்பதற்கு ஆறு மணிநேரம் சென்றதாகவும் 11 விமானங்கள் அழிவுற்றதாகவும் அதிகாரபூர்வமற்ற செய்திகள்தெரிவித்தன.

---

## நவீன சலவைத் தொழில் நிலயம்

[illegible]கோட்டை, செவ்

அரசாங்க வைத்தியசாலைகளின் சலவை வேலைகளை துரிதமாகச் செய்துமுடிக்கத் தனிப்பட்ட ஒரு நவீன சலவைத் தொழில் நிலையத்தை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மின்லேரியாவில் இந் நவீன சலவைத் தொழில் நிலயத்தை திறுவலாம் என ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையில் நவீன சாதனங்களைப் பயன்படுத்தி சலவை வேலைகளை மேற்கொள்ளலாம் எனக் கூறப்படுகிறது.

---

## விரைவில் எழுதும் புதிய சுருக்கெழுத்துமுறை

லண்டன், மார்ச் 9

வெகுஇலகுவாக வாசித்து வெகு விரைவாக எழுதக்கூடிய ஒரு புதிய சுருக்கெழுத்து முறையொன்றை தாம் உருவாக்கியிருப்பதாக உலகப் பிரசித்தி பெற்ற சுருக்கெழுத்துக் கம்பனியான 'பிற்மன்' அறிவித்துள்ளது.

'பிற்மன்ஸ்கிரிப்ட்' என்றழைக்கப்படும் இப் புதிய முறை பிரிட்டிஷ் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் சிறந்ததென ஏற்கப்பட்டிருப்பதுடன், கிழக்கு, மேற்கு ஆபிரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் பரீட்சிக்கப்பட்டுவருகிறது. இப் புதிய முறை மூலம் வெகுவிரைவாக நிமிடத்தில் 100 சொற்களை எழுதும் வேகத்தைப் பெற்றுவிடலாம்.

சாதாரண எழுத்துத் தொகுதி, பத்து வேறு குறிகள், ஆங்கில மொழியில் பெரும்பான்மையாகப் பாவிக்கப்படும் சொற்களுக்கான 24 குறிகள் ஆகியனவற்றை மற்றும் மனனம் செய்துகொண்டால், இப் பிற்மன்ஸ்கிரிப்டுக்குப் பொறுப்பான [illegible] மல்லாது, எத்துறையிலும் குறிப்பெடுக்க விரும்பும் மாணவர்களுக்கும் வர்த்தகர்களுக்கும், சட்டநிபுணர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் பத்திரிகையாளர் உட்பட மற்றும் பலருக்கும் இப் புதியமுறை மிகவும் உகந்ததென இக் கம்பனியின் பயிற்சிப் பகுதித் தலைவர் திரு. பீற்றர் பிற்மன் கருதுகிறார்.

---

மேற்காசிய பிரச்னை

## உடன் பாட்டுக்கு அமெரிக்காசோவியத்முயலும்

### அதிபர் நிக்ஸன் தகவல்

வாஷிங்டன், மார்ச் 0

மேற்காசியப் பிரச்னையில் அமெரிக்காவும் சோவியத் யூனியனும், சம்பந்தப்பட்ட இரு பகுதியினரும் ஓர் உடன்பாட்டுக்கு வரத் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி முயற்சி செய்யுமென அமெரிக்க ஜனாதிபதி திரு. நிக்சன் நம்பிக்கை தெரிவித்தார்,

மேற்காசியாவில் போர் ஓய்வுக் காலக்கெடு முடிவடைந்தபோதிலும் அங்கு அமைதி நிலவுவதாகக் கிடைத்த செய்திகள் ஐ. நா. பொதுக்காரியதரிசி ஊதாண்டுக்கு மன நிம்மதியை அளித்திருப்பதாக ஐ. நா. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்காசிய சமாதானத் தூதுவர் டாக்டர் ஜாரிங் மேலும் சமாதான முயற்சிகளைச் செய்யப்போவதாக அவ்வதிகாரி தெரிவித்தார்.

---

இந்தோ சீனு நெருக்கடி

## சீனுவுக்கு விடும் சவால் என்கிறார் சூஎன்லாய்

பீக்கிங், மார்ச் 9

இந்தோசீனாவில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி. சீனுவுக்கு விடும் சவாலாகவே கருதப்படும் என சீனப்பிரதமர் சூ-என்-லாய் தெரிவித்தார்.

அண்மையில் வடவியட்னும் அழைப்பின்பேரில் ஹனோய்க்கு விஜயம் செய்துவிட்டுத் திரும்பிய அவர் இந்தோசீன யுத்தத்தில் வடவியட்னுமுக்கு வேண்டிய சகல உதவிகளையும் நாம் செய்வோம். முதலாளித்துவ அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராகக் கடும் போராட்டம் நடத்திவரும் வடவியட்னும் மக்களுடன் சீன மக்களும் இணைந்து போராடத் தயாராக இருக்கிறார்கள். அமெரிக்கர்களுடைய ஆக்கிரமிப்பு சீனுவுக்கு விடும் சவாலாகவே நாம் கருதுகிறோம் என்றார்.

சீனப் பிரதமர் சூ-என்-லாய் தலைமையிலான 7 பேர் கொண்டஉயர்தரக்கோஷ்டி ஒன்று வடவியட்னுமுக்குச் சென்றிருந்தது. இதில் சீனுவின் உயர்தர இராணுவ ஆலோசகர்களும் அங்கம் வகித்தனர்.

---

துருக்கியில்

## கடத்தப்பட்ட அமெரிக்க அதிகாரிகள் விடுதலை

அங்காரா, மார்ச் 9

துருக்கியில்கடந்தசிலநாட்களின்முன் புதப்பாக்கி முனையில் கடத்தப்பட்ட நான்கு அமெரிக்க விமானப்படை அதிகாரிகளும் விடுதலை செய்யப்பட்டனர்,

இவர்கள் நால்வரும் துருக்கியில் ராடர் அமைப்பில் ஈடுபட்டபின் விடுதி திரும்புகையில் ஐவர் கொண்ட கோஷ்டி துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றது. இவர்களைக் கடத்திச் சென்றவர்கள் 4 லட்சம் டொலர் பணம் தந்தால் இவர்களை விடுதலை செய்வதாகவும் அல்லாவிட்டால் சுட்டுக்கொலைசெய்யப் போவதாகவும்அறிவித்திருந்தனர். இதைஒட்டி துருக்கி அரசு அவர்களைக்கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டது.

துருக்கியில் அமெரிக்கர் சேவையில் ஈடுபடுவதை எதிர்ப்பவர்களே இவர்களை கடத்தியவர்கள் எனச் சொல்லப்படுகிறது இவர்கள் விடுதலையானதும் நல்லா ரோக்கியத்துடன் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை மீட்பதற்காக துருக்கி அரசாங்கம்எடுத்த நடவடிக்கைளுக்காக அமெரிக்கா தனது பாராட்டைத் தெரிவித்துள்ளது

---

## உல்லாச பிரயாண விடுதிகள்

கோட்டை, வெள்ளி

இலங்கை சர்வோதய இயக்கத் தலைவர் திரு ஏ. ஆரியரத்ன உல்லாசப் பிரயாணத்தை விருத்தி செய்ய கிராமங்கள் தோறும் உல்லாசப் பிரயாண விடுதிகளை அமைக்குமாறு உல்லாசப் பிரயாணசபையிடம் கோரியுள்ளார்.

உல்லாசப் பிரயாணவிடுதிகள் கிராமங்களில் அமைக்கப்பட்டால் உல்லாசப் பிரயாணிகள் இலங்கை மக்களின் கலாச்சாரத்தையும் வாழ்க்கை முறையையும் புரிந்து கொள்வார்கள் எனவும் திரு. ஏ. ரி. ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

தமது குறிக்கோளை அடைவதற்கு மானுட சாதனங்களுள் எதையுமே-எவ்வளவு சக்திவாய்ந்ததாய் இருப்பினும்- நம்பியிருக்கவில்லை. இறைவன் அருளையே நம்பியுள்ளோம். ஸ்ரீ அன்னை

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna | Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் மாசி மாதம் 26ந் திகதி (10-3-71)

## ஒருமைப்பாட்டுக்கு ஒரு வழி

நாவலாசிரியர், விமரிசகர், கவிஞர், பத்திரிகை ஆசிரியர், எழுத்தாளர் சங்கச் செயலாளர் என்று எழுத்துத்துறையில் ஈடுபட்டுள்ள, தங்கள் வாழ்வையே எழுத்துத்துறைக்கு அர்ப்பணித்துள்ள ஐந்து பிரபல சிங்கள எழுத்தாளர்கள் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர். தேசிய ஒருமைப்பாட்டுக்கு பத்திரிகை ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் செய்யக் கூடிய சிறந்த பணியைவிட வேறு எவரும் எதுவும் செய்ய முடியுமென்று சொல்வதற்கில்லை. இதற்கு நமது நாடு சிறந்த உதாரணம்.

எழுத்தாளர்களின் சக்தி மகத்தானது. நமது நாட்டு எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும் வேறு எந்த நாட்டு எழுத்தாளர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் எள்ளளவிலும் குறைந்தவர்களல்லர். ஆனால் அவர்களுக்கு வாய்ப்பும் வசதியும் இல்லாத காரணத்தினால் பிறருடைய விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்றவும் பிறருடைய கட்டுப்பாட்டின் கீழ் இயங்கவும் வேண்டிய துர்ப்பாக்கிய நிலையிருக்கிறது.

வாள் முனையைவிட பேனா முனையைக்கண்டே அஞ்சுகின்றேன் என்று மாவீரன் நெப்போலியன் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினானென்றால் எழுத்தாளர்களினதும் பத்திரிகையாளர்களினதும் வலிமையை என்னென்று சொல்வது.

ஆனால் நமது நாட்டில் எழுத்தாளர்களினதும் பத்திரிகையாளர்களினதும் வலிமையும் திறமையும் திசை திருப்பப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுவருவது கவலைக்குரியது. தேசிய ஒருமைப்பாடு நமது நாட்டில் சீர்குலைந்து இன்று பிளவும், பிரிவினையும், வெறுப்பும் வேற்றுமையும் நிலவுவதற்கு அரசியல்வாதிகள் மீது மட்டும் குறை கூறம் சொல்லமுடியாது. அரசியல்வாதிகள் இவ்விதம் நடந்துகொள்வதற்கு எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்களே பெரும்பாலும் காரணமென்று கூடச்சொல்லலாம்.

தேசிய ஒருமைப்பாடு ஏற்படுவதற்கு சிங்கள-தமிழ் எழுத்தாளர் பத்திரிகையாளர் மத்தியில் நல்லெண்ணமும் நட்புறவும் வளரவேண்டியது அவசியம். இந்நிலையில் ஐந்து பிரபல சிங்கள எழுத்தாளர்களை இங்கு இன்று வரவழைக்கும் யாழ்ப்பாணக் கலை இலக்கியப் பெருமன்றத்தினர் பாராட்டுக்குரியவர்கள். எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்கள் பரஸ்பரம் மனம்விட்டுப் பேசி நாட்டின் நலனைப் பெரிதாகக் கருதி தேசிய ஒருமைப்பாட்டுக்குத் தங்கள் பேனா முனையைப் பயன்படுத்தச்செய்வதற்கு இந்தச் சந்திப்பு உதவவேண்டும்.

## 'தமிழர்களுக்கு விடிவுதருவது இளைஞரின் பொறுப்பு'

சித்தன்கேணி, செவ்வாய்

"தமிழினத்தின் இன்றைய இக்கட்டான நிலையை மாற்றியமைத்து, தமிழர்களுக்கு விடிவு ஏற்படுத்தக்கூடிய சக்தி, தமிழ் இளைஞர் கைகளில் தான் உள்ளது. எந்த நேரத்திலும், எந்த நிலைமையிலும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடவேண்டிய கடமையில் ஈடுபடவேண்டும்"

இவ்வாறு சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்ட கருத்தரங்கில் நேற்று முன்தினம் பேசிய வழக்குரைஞர் திரு எம். ஆலாலசுந்தரம் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: 1070ம் ஆண்டில் ஏற்பட்ட கூட்டணி ஆட்சியில், நெருக்கடியான நிலையில் நாம் இருக்கிறோம். சோஷலிஸம் பற்றிப் பேசும் அரசாங்கம், உலகத்தில் எங்குமே நடந்திராத முறையில் தரப்படுத்தல் என்ற போர்வையில் தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழகப் படிப்புக்குத் தடைபோடுகிறது. இந்நாட்டின் படைகளில் உத்தியோகம் பார்க்கத் தமிழ் மக்களுக்கு இடம் கொடுக்க மறுக்கப்படுகிறது. அண்மையில் நடைபெற்ற பட்டதாரிகள் நியமனத்தில்கூடத் தமிழ்ப்பகுதிகளில் சில புறக்கணிக்கப்பட்டு யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் சிறு தொகையினரே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் அந்நியச் செலாவணி மோசடி என்ற போர்வையில் தமிழ்நாட்டுச் சஞ்சிகைகளுக்குத் தடை விதித்த அதே வேளையில் கீழ்த்தரமான முறையில் பாலுணர்ச்சியைத் தூண்டும் ஆங்கிலச் சஞ்சிகைகள் நாட்டுக்குள் தாராளமாக இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றன. சோஷலிஸ அரசாங்கத்தின் நிதியமைச்சர் என் எம். பெரேரா கூட தேசியஅரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்தி, அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை போன்றவற்றிற்குத் தமது வரவு-செலவுத் திட்டத்தில மான்யம் ஒதுக்காததன் மூலம் தமிழ்ப்பகுதிகளில் பொருளாதார வளர்ச்சிக்குத் தடைபோட்டுள்ளார்."

மேற்படி கழக முன்றலில் நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு திரு. ரி. விக்னேஸ்வரன் தலைமைவகித்தார்.

—

### பாராட்டு

உடுவில், செவ்.

மானிப்பாய் மயானத்தில் நீண்டகாலமாக நிலவி வந்த சமூக குறைபாடுகளை நீக்கி உயர்சாதி மக்களோடு சமமாக சிறுபான்மை தமிழரின் பிரேதங்களை தகனம் செய்து கொள்ளக் கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த மானிப்பாய் பட்டினசபையின் செயலைப் பாராட்டியுள்ளது மானிப்பாய் பாரதி சனசமூக நிலையம்.

# சிங்கள எழுத்தாளர் ய

# ஒற்றுமைக்கு வழிவகுக்

ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்கு முன்னர் 1961 ஆம் ஆண்டு என்று நினைக்கின்றேன் சிங்கள-தமிழ் எழுத்தாளர் சந்திப்பு ஒன்று கண்டியில் நடைபெற்றது. பிரபல எழுத்தாளர்கள், இரு தரப்பிலும் பிரதிநிதித்துவம் வகித்தனர். காலஞ்சென்ற சிங்கள மகாகவி பி. பி. அல்விஸ் பெரரா, ஆராய்ச்சி அறிஞர் சாள்ஸ் டி சில்வா: பிரபல எழுத்தாளர் குணதாசா அமரசேகர போன்றோர் இந்தச் சந்திப்பின்போது கலந்துகொண்டனர். மகாகவி பாரதியார் கவிதைகளைச் சிங்களத்தில் மொழி பெயர்ப்பதுபோன்ற பல ஆக்கத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இந்தத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த மகாகவி பி. பி. அல்விஸ் பெரேரா காலன் வசப்பட்டார். திட்டங்களில் ஒரு தளர்ச்சிஏற்பட்டது.

இன்று மீண்டும் ஒரு சந்திப்பு நிகழ்கிறது. யாழ். நகரில் தமிழ் எழுத்தாளர்கள் கலைஞர்களைச் சந்திக்க சிங்கள எழுத்தாளர் குழுவொன்று வருகின்றது. சாகித்திய பரிசு பெற்றவரும் முன்னணி நாவலாசிரியருமான திரு கே ஜெயதிலக முன்னணிக் கவிஞர்களுள் ஒருவரான ஸ்ரீலால் கொடிகார சிறுகதை எழுத்தாளரும் விமர்சகருமான திரு ஆபேசிங்க எழுத்தாளர் சங்கச்செயலளாரான திரு குணசேனவிதான கல்கலைக் கழகவிரிவுரையாளரும் முன்னணி விமர்சகருமானகலாநிதி ரோணதீர ஆகியோர் இன்று தமிழ் எழுத்தாளர் மத்தியில் பேசுவார்கள். கடைந்தெடுத்த ஒரு தற்கால சிங்கள இலக்கிய கர்த்தாக்களின் தூதுக்குழுவாக இந்தக்குழு அமைகின்றது.

'வில்லேர் உழவர் பகை கொளினும் கொள்ளற்க சொல்லேர் உழவர்பகை' என்று வள்ளுவர் எழுத்தாளரின் பெருமையை ஆக்க ஆற்றலைப்படம்பிடித்துகாட்டுகின்றார். கொலை 'வாளினை விடப் பலம் வாய்ந்தது எழுதுகோல்' என்ற ஆங்கிலப் பழமொழியும் உண்டு. பல நாடுகளின் வரலாற்றைத் திசைதிருப்பியது எழுத்துக்கள்தான் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. சோவியத்து ஒன்றியத்தின் வரலாற்றை- ஏன் உலகவரலாற்றையே- உருமாறச் செய்த எழுத்தாளர்களான கால்மாக்ஸ், வி ஐ.லெனின், லியோன் ட்ரொட்ஸ்கி, லியோ ரொல்ஸ்ரோஸ், மாக்ஸிம்கோர்க்கி, ரேகனேவ், அன்ரன் செக்கோவ் போன்றோரையும் ஷெலி, வால்ட்விட்மன், விக்டர் ஹியூகோ ஹரல்ட் லாஸ்கி, இக்பால், தாகூர், ராம் மோகன்ராய், நாவலர், அநகாரிகதர்மபால சித்தி லெப்பை, பாரதி போன்றோரது எழுத்துக்களின் வலிமையையும் அவற்றினால் ஏற்பட்ட சமுதாயத் தாக்கங்களும் விளைவுகளும் வரலாற்றுத் திருப்பங்களாக அமைந்துள்ளன என்பதைதையும் எவர்தான் மறுக்க முடியும். நல்லவையின் ஆக்கத்திற்கும் அல்லவையின் அழிவிற்கும் வழிகாட்டிகள் அவர்களன்றோ.

**ஆ. தேவராசன்**

நமது நாட்டு எழுத்தாளர்களும் சந்திக்கும்போது அது வெறு சந்திப்பாக இருக்க முடியாது ஒரு எழுத்தாளனின் படைப்புவெறும் நுகழ்வாயில் மட்டுமே அதனூடே ஒரு சமூகத்தின் அமைப்பையே கா[ண]

முடிகிறது சமூக பொரு[ளா]தார அரசியல் கலாசா[ர] அடிப்படைகள் அனைத்[தை]யும் அறியமுடிகின்றது எழு[த்]தாளன் கற்பனை அ[...] மொழியினூடே தொழ[...] படுகிறது ஆகவே அ[...] மொழியின் ஆற்றலை[...] ஆக்க சக்தியையும் கூட[...] அறிய முடிகிறது இ[...] அடிப்படையில் இந்தச் ச[ந்]திப்பு அமையும்போது அ[...] விளைவுகள் தேசிய ந[...] பொருந்தியவையாக அ[...] யும்ஒருவரை ஒருவர் புரிந்[...] மதிக்கும் சிங்கள தமி[ழ்] எழுத்தாளர்கள் ஒரு புதி[ய] சமுதாயத்தை உருவாக்[க] முடியும் சிங்கள தமி[ழ்] நல்லுறவை வலுப்படுத்[...] அதன் அடிப்படையி[ல்] இரண்டு மொழிகளைய[ும்] ஒரு நிறையிலிட்டு மதிக்[கு]ம் மனப் பண்பை சமூகத்தி[ல்] வளர்க்க முடியும் இத[...] சமூக [...]மைப்பு [...]ஸ் நல்லெ[ண்]ணத்தைக் [...] டதாக மாறும் அத[...] அரசியல் அமைப்பு மா[...] பொருளாதார எழுச்சி[...] வழி சமைக்கும் இ[...] சந்திப்பு நிரந்தரத்து[...] பெற இதுவெறும் சந்[திப்]பாக இல்லாமல் எழுத்[...] பரிமாற்றமாகப் பரிணமி[க்க] வேண்டும்.

# 'வீடுகளை இடிக்கும்படி கொடுத்த முன்னறிவித்தலை வாபஸ் பெறுக'

## யாழ். மாநகரசபைக்கு வரும் பிரேரணைகள்

யாழ்ப்பாணம், புதன்

குருநகர் றெக்கிளமேசன் வீடமைப்பு திட்டத்தில் உள்ள வீடுகளை இடிக்கும்படி சுகாதாரப் பகுதியினர் கொடுத்திருக்கும் முன்னறிவித்தலை வாபஸ் பெறும்படி கோரும் பிரேரணையொன்று இம்மாதம் 16-ம் திகதி நடைபெறவிருக்கும் மாநகரசபைக் கூட்டத்தில் கொண்டுவரப்படவிருக்கிறது.

மேயர் திரு. ரி. எஸ். துரைராஜா தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் டாக்டர் ஏ. எல். ஏபிரகாம் கொண்டு வரவிருக்கும் பிரேரணையின் விபரம் வருமாறு: குருநகர் றெக்கிளமேசன் வீடமைப்புத்திட்டத்திலுள்ள குடியிருப்புக் காணிகளின் எல்லைக்குட்பட்ட கட்டிடங்கள் கட்டியவர்கள்மீது சபைநடவடிக்கை எடுப்பதில்லையெனவும் குடியிருப்பவர்கள் தங்கள் தங்கள் எல்லைக்கு உட்பட சுகாதார முறைகளுக்கு மாறாக வீடுகள் கட்டியிருப்பவர்களுக்கு யாழ்ப்பாண மாநகரசபை சுகாதாரப் பிரிவு தகுந்த ஆலோசனைகளை அளிப்பதெனவும் முன்பு இச்சபை தீர்மானித்தது. ஆனால் தற்போது எல்லைக்குட்பட்ட வீடுகள் கட்டி இருக்கும்வீடுகளை இடிக்கும்படி முன்னறிவித்தல் கொடுத்திருக்கும் சுகாதாரப் பகுதியினர் [...] சபையின் தீர்[மானத்துக்கு மாறாக ...] சுகாதாரப் பகுதியினர் தங்கள் முன்னறிவித்தல் கடிதங்களை வாபஸ்பெற்று சபையின் முன்னைய தீர்மானத்தை நடைமுறையில் கொண்டுவர வேண்டுமென இச்சபை தீர்மானிக்கிறது.

திரு என் ரி செல்லத்துரை கீழ்க்காணும் பிரேரணையை கொண்டு வருவார். மக்கள் அரசாங்கம் நவீன ஐரோப்பிய மொழிகளை மாணவர்களுக்குப் போதிக்க விரைவில் ஒழுங்குகளை மேற்கொள்ள இருப்பதால் பிரஞ்சு மொழியைத் தேர்ந்து கற்க விரும்பும் தமிழ் மாணவர்களது வசதிக்குப் பயன்பட யாழ். பொது ஜன நூலகத்திற்கும் அதன் சிறுவர் பிரிவிற்கும் பிரஞ்சு மொழிப் பாடநூல்களையும் ஏனைய இலக்கிய நூல்களையும் அன்பளிப்புச் செய்யும்படி பிரெஞ்சுத் தூதரகத்தைக் கேட்டுக் கொள்வதென இம்மன்றம் தீர்மானிக்கிறது. அத்துடன் பிரெஞ்சு மொழியைப்படிக்கும் ஆர்வத்தை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் பொருட்டு பிரெஞ்சு மொழித் திரைப்படவிழாக்களையும் கலாச்சார நிகழ்ச்சிகளையும் இலங்கையில் வடபாகத்தில் அடிக்கடி நடத்த முன்வரும்படியும் பிரெஞ்சுத் தூதரகத்தை மேலும் கேட்டுக் கொள்வதெனவும் தீர்மானிக்கிறது.

டாக்டர் ஏ எல் ஏபிரகாம் கீழ்காணும் பிரேரணையை கொண்டு வருவார். குருநகர் றெக்கிளமேசன் குடியேற்றத் திட்டத்திலுள்ள வீட்டுக் காணிகளில் குடியிருப்பாளர்கள் கடைகளைக் கட்டி வாடகைக்குக்கொடுப்பதை அனுமதிக்கக் கூடாது என இச்சபை தீர்மானிக்கும் இதே சந்தர்ப்பத்தில் ஒருசில ஏழைகள் தங்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைக்கான பொருளாதார வளர்ச்சிக்காக தங்கள் வீடுகளுடன் ஒரு கடையைக் கட்டி தங்கள் பெயரில்பதிவு செய்திருந்தால் இவர்கள் மீது கருணை காட்டி இவர்களை அனுமதிக்க வேண்டுமெனவும் சிலர்ஒருகடைக்கு அதிகமாகக் கட்டியிருந்தால் இதனை அனுமதிக்கக் கூடாது எனவும் இச்சபை தீர்மானிக்கிறது.

திரு தம்பு கந்தையா கீழ்க்காணும் பிரேரணையைக் கொண்டு வருவார். கொழும்புத்துறை கிராம சேவையாளர் பிரிவு மிகவும் பெரிதாகவும் கிட்டத்தட்ட இருபத்தையாயிரம் மக்களுக்கு ஒருவரே கிராம சேவையாளராகவும் இருப்பதனால் கிராமசேவையாளருக்கும் பொதுமக்களுக்கும் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே இக்கிராம சேவையாளர் பிரிவை இரு பிரிவுகளாக அதாவது ஒன்று கொழும்புத்துறைக் கிராமசேவையாளர் பிரிவாகவும் மற்றதை சுண்டிக்குளி கிராமசேவையாளர் பிரிவாகவும் மாற்றி அமைத்துத் தரும்படி பொது நிர்வாக உள்ளூராட்சி உள்நாட்[டு] விவகார அமைச்சரை இ[ச்]சபை வேண்டிக் கொள்[...]கிறது.

திரு. வி. சிவசுப்பிரம[ணி]யம் கீழ்க்காணும் பிரே[ரணை]யைக் கொண்டு வருவா[ர்.] மிகப் பெரும் ஜனநா[யக]வாதியும் பெரும் 'திதவா[...] யுமான காலஞ்சென்ற [...] தம அமைச்சர் திரு எ[ஸ்.] டபிள்யூ ஆர் டி பண்டா[ர]நாயக்கா திட்டமிடப்பட்[ட] அரசமைப்புத் திட்டத்[தை] நயந்து வரவேற்கும் வே[ளை]யில் கடந்த தேர்தலி[ல்] பெரும்பான்மையான [...] கள் குழாத்தினரால் வா[...] களிக்கப்பட்டதும் மரி[...] தைக்குரிய அவரது கண[...] ரால் எதிர்நோக்கப்பட்ட[...] வுமான கொள்கைகளுக்[கு] உயிரும் உதிரமும் தசையு[ம்] ஈந்து நிறைவேற்றி வைப்[ப]துடன் இலங்கை மக்[கள்] முந்திய அரசாங்க ஆட்[சி]யின்கீழ் இதுகாறும் அனு[ப]வித்து வந்ததான சுதந்திர[ங்]கள் எவற்றையேனு[ம்] அவையாவன: அடிப்பன[டை] மனித உரிமைகளையும் சு[தந்]திரங்களையும், நீதிமுறை[...] சுதந்திரத்தையும், நீ[தி]முறை அதிகாரங்களு[க்] உரிமையளித்தலையும் [...] யோகித்தலையும் அது மறு[க்]காத வகையில் புதிய அ[ரச]மைப்புத் திட்டம் வ[...] யப்படப் பார்த்துக்கொள்[ள] வேண்டுமென்றும் [...] போது பிரதம அமைச்[சர்] திருமதி பண்டாரநாயக்[கா]வைக் கேட்டுக் கொள்[...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...யாழ். வருகை: ...க்கவேண்டும்!

இந்தச்சந்திப்பு இலக்கியப் பரிமாற்றமாக பரிணமித்து ஒரு தேசிய வரலாற்றின் இழையோட்டத்தில்இணைந்து நிற்கிறது. அந்த நல்லாக்கத்திற்கு இந்தச் சந்திப்புப் போன்ற பலசந்திப்புகளும் இலக்கியப்பரிமாற்றங்களும் அவசியம். அதற்கு இது அடித்தளமாக- கால்கோளாக அமையட்டும்.

## ஆசிரியருக்குக்கடிதங்கள்

# கச்சதீவு யாத்திரை:

## அதிகாரிகள்கவனிப்பார்களா?

கடந்த வருடம் கச்சதீவு செல்வதற்காகத் துறைமுகங்களை நாடிச் சென்ற பிரயாணிகள் பட்ட துன்பங்கள் கொஞ்சமல்ல, சிலர் யாத்திரையை மேற்கொள்ள முடியாமலே ஏமாற்றத்துடன் திரும்பினர். மாசி மாதம் 27-ம் திகதி நடந்த பாலைதீவு படகு விபத்தைத் தொடர்ந்து ஏப்ரல் 4-ம் ஆரம்பமான கச்சதீவு உற்சவத்துக்கு செல்லும் யாத்திரிகர்களின் பாதுகாப்பை முன்னிட்டு எடுக்கப்பட்ட பல நடவடிக்கைகள் தான் யாத்திரிகர்களின் கஷ்டங்களுக்குக் காரணமாகும்.

அனுமதி பெற்ற படகுகளே கச்சதீவு செல்லலாம் என்று இரண்டாம் திகதி யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினால் கூட்டப்பட்ட மகாநாடு முடிவு செய்தது. மீன்பிடி வள்ளங்களில் யாத்திரிகர்களை கச்சதீவுக்கு செல்ல அனுமதிக்கக் கூடாதென பொலிசார் வலியுறுத்தினர். இதைத் தொடர்ந்து கப்பல் சேவை நிபுணர் கோஷ்டியொன்றை யாழ்ப்பாணம் வந்து படகுகளை பரிசோதித்து லைசென்ஸ் வழங்குமாறு கோரி கொழும்புக்கு தந்தி அனுப்பப்பட்டது 4-ம் திகதி துறைமுகங்களில் யாத்திரிகள் கூடிவிட்டனர். யாத்திரைக்கு மக்கள் காவல் கிடக்கும் வேளையில்தான் நிபுணர் கோஷ்டி வந்து சேர்ந்தது. முதலில் யாழ்ப்பாணத்துறைமுகத்தில் சோதனை செய்யப்பட்டது.

அடுத்து நிபுணர் கோஷ்டி ஊர்காவற்றுறை வந்தது. நூற்றுக்கணக்காக மக்கள் கூடியிருந்த அத்துறைமுகத்தில் இரண்டு படகுகளுக்கு மட்டும் லைசென்ஸ் வழங்கிவிட்டு நிபுணர் கோஷ்டி வேறு துறைமுகத்துக்குச் சென்று விட்டது.

நிபுணர் கோஷ்டி லைசென்ஸ் வழங்கிய இரண்டு படகுகளும் யாத்திரிகர்களுடன் புறப்பட்டுச் சென்று விட்டதால்அன்று மற்ற யாத்திரிகர்கள் போவதற்கு வழியில்லை. பின்பு மீன்பிடிப் படகுகளுக்கும் அனுமதி வழங்கப்பட்ட பின்னர் மிகுதிப் பேர் பிரயாணஞ் செய்தனர்.

யாத்திரிகர்களுக்கு சென்ற முறையைப் போன்று கஷ்டமும், துன்பமும் ஏமாற்றமும் அளிக்காமல் போதிய படகு சேவைகளை ஏற்படுத்துவது அரசின் இன்றியமையாத கடமையாகும்.

-வி. இன்னாசிமுத்து
யாழ்ப்பாணம்.

0 0

# கச்சதீவுக்கு "கஜபாகு"

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 19-ம் திகதி ஆரம்பமாகி 21-ம் திகதி முடிவடையவுள்ளது.

வடபகுதியில் உள்ள பல்வேறு துறைமுகங்களிலிருந்தும் படகுசேவை நடைபெறும். சேவைக்குத் தகுதியில்லாத படகுகளும்சென்ற முறையைப் போல் இம்முறையும் சேவையிலீடுபடலாம். இதனால் யாத்திரிகர்கள் அவதியுறவேண்டியும் ஏற்படும்.

இலங்கைக் கடற்படைக் கப்பலான கஜபாகுவில் ஒரு முறையில் அல்லது இரு முறையில் யாத்திரிகர்களை குறிப்பிட்ட ஒரு துறைமுகத்திலிருந்து கச்சதீவுக்கு ஏற்றிச் செல்ல ஒழுங்குகள் செய்யப்படுமானல் அரசாங்கத்துக்கு அதிக வருமானம் கிடைப்பதுடன், பொருட்கள் கடத்தப்படுதலையும் தவிர்த்து யாத்திரிகர்களின் உயிருக்கு ஏற்படும் அபாயத்தையும் தடுக்கக்கூடியதாகவிருக்கும்.

சென்ற வருடம் கஜபாகு கப்பல் கச்சதீவிலிருந்து பெருந்தொகையான யாத்திரிகர்களை ஏற்றிக்கொண்டு ஊர்காவற்றுறையில் விட்டதும், இதற்கு ஊர்காவற்றுறை கடற்படை ரோந்துப் படகுகள் உதவியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

யாத்திரிகன்

0 0 0

# இறுதித் தேர்வு

யாழ்ப்பாணம். புதன் வடமாகாண ஆசிரியர் சங்க ஆதரவில் நடைபெற்ற வருடாந்த கட்டுரை பாடல் போட்டிக்கான இறுதித் தேர்வும் பரிசளிப்புவிழாவும் இம்மாதம் 12-ம் திகதி மாலை யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் மேற்படிசங்க கல்விச்சபைத் தலைவர்திரு. கே முத்துக்குமாரசாமி தலைமையில்நடைபெறும் இவ்விழாவில் சங்கத் தலைவர் திரு கே. மகாலிங்கசிவம் வெற்றிபெறுவோருக்குபரிசில்களை வழங்குவார்.

தென்றும் இம்மன்றம் தீர்மானிக்கிறது.

# 'மகா' மறைந்து ஒரு வருடம்!

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் சுடர்விட்டுக் கொண்டிருந்த குடத்துள் விளக்கு அணைந்து இன்று வருடமென்றாகிவிட்டது. செல்வராசா என்றழைக்கப்பட்ட திரு. மகாலிங்கத்தின் பிரிவைத் தான் இங்கு நினைவுபடுத்துகின்றேன் 'மகா' பிரிந்துவிட்டார் என்பதைச் சொல்லித்தான் நினைவூட்டவேண்டும்' ஏனெனில் அவர் நண்பர் நெஞ்செல்லாம் வாழ்பவர்.

'மகா' ஒரு குடத்துள் விளக்கு ஒன்றும் தெரியாதவன் போன்று வாழ்ந்து மணவாழ்வு ஒன்றைத் தவிர்ந்த மற்றெல்லாம் ஆய்ந்து தெளிந்து தன் முப்பத்திரண்டாவது ஆண்டில் கடந்த வருடம் பெப்ரவரி இருபதாம் திகதி 'மகா' இவ்வுலகை நீத்தார். அரசியல் தொடக்கம் சகலதுறைகளிலும் அவர் புலமை பெற்றிருந்ததை அவருடன் மிக நெருங்கிப்பழகியவர்களே அறிவர்.

திரு சரவண பாக்கியம் தம்பதிகளின் இரண்டாவது மகனான 'மகா' ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தெட்டாம் வருடம் ஜனவரி இருபத்தைந்தாம்திகதி மானிப்பாயில் பிறந்தவர் சேணிய தெரு மெதடிஸ்தமிஷன் பாடசாலையிலும் யாழ். மத்திய கல்லூரியிலும் பரி. யோவான் கல்லூரியிலும் கல்வி பயின்றவர் மாணவனாக இருந்த காலத்தில் விளையாட்டுத்துறையில் மேம்படத்துலங்கினர் அகில இலங்கை அடிப்படையில் நடைபெற்ற பல போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிகள் ஈட்டியவர்.

பல கஷ்டங்களுக்கும் தொல்லைகளுக்கும் உறுதி தளராத உள்ளத்துடன் ஈடுகொடுத்து எதிர் நீச்சல் போட்டு சமூகத்துக்கும் தம் குடும்பத்துக்கும் உயர்ந்த பல சேவைகள் ஆற்றிய 'மகா' வின்சேவைகள் போதும்என்றெண்ணிப் போலும் இறைஅவரைத் தன் பதம் சேர்த்துக் கொண்டார் 'மகா' வுக்கு வேண்டிய அனைவரும் ஆறுத்துயரில் ஆழ்ந்தனர்.

'மகா' வின் முதலாண்டுத்திதியான இன்று அவர் [illegible] வேண்டிக்கொள்வோம்.

— ஒரு நண்பன்

# ஜெயபாரதன் எழுதுவது:

"இக்கரையில் ராமேஸ்வரம். அக்கரையில் கேதீஸ்வரம்' வெள்ளத்தால் தமிழ் மக்கள் பிரிந்தாலும் உள்ளத்தால் என்றும் பிணைக்கப்பட்டவர்" என்று சிவராத்திரியன்று ராமேஸ்வரத்தில் நமது சுவாமிநாதத் தம்பிரான்சுவாமிகள் செய்த இன்னிசைக் கதாப்பிரசங்கத்தில் கூறியபோது இடிமுழக்கம் போன்ற கரகோஷம் எழுந்ததாம். அவர் மூன்று மணி நேரம் கதைசெய்தபோது ஏராளமான மக்கள் கூட்டம் மெய்மறந்து கேட்டதாகவும், ராமநாதபுரம் ராஜா அவர்கள் நேரில் வந்து சுவாமிகளுக்கு மாலை மரியாதையும் சன்மானமும் செய்ததாகவும் ஓரன்பர் எழுதுகின்றார்.

அங்கு கதைசெய்துவிட்டு இலங்கை திரும்புவதாக ஏற்கனவே திட்டமிட்டிருந்தது. ஆனல் அழைப்புகள் குவிந்ததால் அவனுசியில் கோடி அர்ச்சனைப் பூர்த்தி விழாவில் கதைசெய்துவிட்டு 7, 8ந் திகதிகளில் தென்காசி மாசி மகம் திருவிழாவிலும், 10ந் திகதி கோயம்புத்தூர், 12ந் திகதி திருப்பரங்குன்றம் இவ்விடங்களிலும் பேசி, 15ந் திகதி கப்பல் வழியாக யாழ்ப்பாணம் வருவதாகத் தெரிகிறது. ஸ்ரீமத் தம்பிரானுக்குக் கிடைக்கும் புகழும் பாராட்டும் நம் ஈழத்திற்குக் கிடைப்பதாகுமல்லவா?

0 0 0

சென்ற வெள்ளிக்கிழமை செல்வி அனுஷ்யாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் கொழும்பு நவரங்கஹலாவில் வெற்றிகரமாக நடைபெற்றது மண்டபம் நிறைந்த கூட்டம். அக்கட்டடத்திலே விதவிதமான 'பாஷன்'களும் அழகுக் காட்சிகளும்.

படைத்தல், காத்தல். அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில் புரிந்திடும் கலைத்தெய்வமான அம்பலவாணரின் பெரிய திருவுருவத்துக்கு முதலில் வழிபாடு நடைபெற்றபோது மண்டபத்திலிருந்த எல்லா மக்களும் சாதி சமய வேற்றுமையின்றி எழுந்து நின்ற காட்சியும், சென்னையிலிருந்து வந்து நட்டுவாங்கம் செய்த குரு கே. லட்சுமணன் அவர்களின் சம்ஸ்கிருத சுலோகங்களும் இந்த நடன அரங்கேற்றத்துக்கு ஒரு தெய்வீகச் சூழ்நிலையை அளிப்பதாக இருந்தது. நமது அருங்கலைகளின் நோக்கம் புலன் நுகர்ச்சியல்ல; அது மனிதரைத் தெய்வமாக்குவதே அல்லவா?

நட்டுவாங்கமும் பின்னணி இசையும் முதல் தரம். லட்சுமணன் அவர்களின் கம்பீரமான ஆண் குரலும், ஸ்ரீமதி நாகேஸ்வரி பிரமமானந்தா, ஸ்ரீமதி சண்முகராஜா இவர்களது இனிமையான பெண் குரல்களும், இரத்தினத்தின் மிருதங்கம், வயலின் பிச்சையப்பா, ஜேசுதாஸனின் புல்லாங்குழல். ஸ்ரீமதி சுந்தரலட்சுமி செல்வராஜாவின் வீணை சுப்பையா அவர்களின் கிளாரனெட் இவையெல்லாம் சேர்ந்த பின்னணி இசைமேலாக அமைந்து செவிக்கு இன்பமளித்துப் பரவசப்படுத்தியது

கொழும்பிலே சென்ட் பிரிட்ஜஸ் கான்வெண்டில் படிக்கும் 14 வயதான அனுஷ்யாவின் அன்றைய நடனம், ஈழத்தில் ஒரு புதிய எதிர்கால நட்சத்திரம் உதயமாவதுபோல் இருந்தது மதுரை மீனாட்சியைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டிய காட்சி இங்கு புதுமையானது. எல்லாருடைய மனதையும் கவர்ந்து நல்ல பாராட்டுப் பெற்றது. பரத நாட்டியத்திலே நடிப்பையும் அபிநயத்துடன் அழகாகச் சேர்க்கும் புதிய உத்திகள் போற்றத்தக்கதாகும். "நீ இந்த மாயம்..." என்ற வர்ணத்துக்கு அவர் ஆடிய பரதம், அவரது கலைத்திறமையைக் காட்டுவதாக அமைந்தது.

வண. பிதா தனிநாயக அடிகளார் ஆங்கிலத்திலும் தமிழிலும் பாராட்டி ஆசி கூறுகையில் நடராஜமூர்த்தியின் தத்துவத்தைக் குறிப்பிட்டார். அனுஷ்யாவின் அருங்கலை ஓங்கி நீடூழி வாழ வேண்டுமென்று பலத்த கரகோஷங்களுக்கிடையே வாழ்த்தினர். நிறைந்த மனதுடன் கூடிய எல்லாரது வாழ்த்துடன் அரங்கேற்றம் வெற்றிகரமாக நிறைவேறியது. அனுஷ்யாவுக்கு நல்ல எதிர்காலம் காத்துள்ளதென்பதை உணர்ந்தேன்.

0 0 0

கொழும்பிலே விமலாதாகரின் கடைசிப் பிரசங்கத்தைக் கேட்டேன். தத்துவ ஞானியாகிய ஜே. கிருஷ்ணமூர்த்தியின் பிரசங்கங்களை இது நினைவூட்டியது சுமார் 50 வயதுள்ள விமலா அவர்களின் உயரிய ஆங்கிலப்பேச்சு கேட்போர் மனதைக் கவருவதாகவும் எளிமையாகவும் பயனுள்ளதாகவுமுள்ளது. பரந்த உள்ளத்துடன் பல விஷயங்களையும் அவர் தெளிவாக விளக்குகின்றார். கடைசி நாள், கேள்விகளுக்கு பதில். முதல் கேள்வி குழந்தைகளை எப்படி வளர்க்கவேண்டும் என்பது "இது ருசியான, ஆனல் முக்கியமான விஷயம். வளர்ப்பது யார்? அவர் எப்படிப்பட்டவர்? கர்ப்பத்தில் இருக்கையிலேயே தாயின் எண்ணங்கள் குழந்தையை பாதிக்கின்றன. குழந்தைக்குப் புரியாவிடினும் சூழ்நிலையும், அங்கு பேசப்படும் பேச்சுகளும் குழந்தையின் மனதை உருவாக்கும்... என்றெல்லாம் சொன்னர். குழந்தைகளை வளர்ப்பதில் பெற்றோர்கள் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டுமென்பதை உணரக் கூடியதாக இருந்தது.

## புங்குடுதீவு முத்துமாரியம்பாள்

# மாசிமகத்திருவிழா

ஈழத்திருநாட்டில் வடபால் அமைந்த சப்த தீவுகளில் சைவமும் தமிழும் வளம்பெற்று விளங்கும் புங்குடுதீவு பல்வகையாலும் சிறப்புடையதோர் சிற்றூராகும்.

இங்குள்ளபெருங்காடு என்னும் பகுதியில் அமைந்த மானெழுவதி திலுள்ள கோவில் வயற்கண் எழுந்தருளியுள்ள இம் முத்துமாரியம்பாள் ஆலயம் தொன்மையும் பெருமையும் வாய்த்தது. இவ்வாலயத்தில் பிரதி வருடமும் ஆனி மாதத்தில் நடைபெறும் மகோற்சவத்தின்போது சைவாகம விதிப்படி அபிடேக ஆராதனைகளும் பூசைகளும் கூட்டுப் பிரார்த்தனையும் வேதபாராயணமும் சமயச் சொற்பொழிவுகளும் நடைபெறுகின்றன.

'தானே வந்தெம்மைத் தலையளித்தாட்கொண்டருளும்' தன்மையுடைய ஸ்ரீ முத்துமாரியம்பாள் தன் திருக்கோவிலுக்கு வரமுடியாத அடியார்களுக்கென 'இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச் செம்மலப் பொற்பாதந் தந்தருள் மாசிமகத்தன்று கிராம ஊர்வலம் வருகின்றாள். மக்கள் நோய் பிணி நீங்கி நல்வாழ்வு வாழ இறைவியை இறைஞ்சுவதற்கு இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்வது இக் கிராமத்தின் பண்டு தொட்டு வரும் வழக்கமாகும்.

இவ்வூர்வலம் தேவார திருவாசகதிருமுறைப் பாடல்கள் மங்கள வாத்திய சகிதம் வருதல், லக்ஷ்மி சரஸ்வதி கவரிவீச சப்த மாதர்கள் மங்களங்கள் எடுத்தோத அம்பாள் திருவூஞ்சல் ஆடும் காட்சியை அடியார் மனதில் நினைவூட்டும் பேராசிரியர் சி. இ. சதாசிவம் பிள்ளை அவர்கள் பாடிய திருவூஞ்சலில் இக் காட்சியைக் காட்டுகிறார்.

அரமகளிர் கற்பகப்
பூமாரி பெய்ய

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலியில் பனை வெல்ல நிலையம் அமைக்க யோசனை

அராலி, செவ்

அராலி கிராமசபைப் பகுதிக்குள் பனைவெல்ல ஆராய்ச்சி நிலையம் அமைப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டுவருகிறது. இத்திட்டம் உட்பட அராலிக் கிராமத்தின் அபிவிருத்தியைபொட்டிப்பல திட்டங்கள் ஆலோசனையிலுள்ளன. இவை பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு திட்டத்திற்கொன்றாகக் குழுக்கள் அராலிக்கிராம அபிவிருத்தி சபைக் கூட்டத்தின் போது அமைக்கப்பட்டன.

அராலிக் கிராம அபிவிருத்திசபைக் கூட்டம் நேற்று வலிமேற்குக் காரியாதிகாரி திரு மா நடராசா தலைமையில் நடைபெற்றது கிராம சபை உறுப்பினர்களும் கிராம முன்னேற்றச்சங்க உறுப்பினர்கள் மற்றும் கிராம சேவையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் அராலிக் கிராமசபையின் அபிவிருத்திக்கான பல திட்டங்கள் ஆராயப்பட்டன.

பனை வெல்ல ஆராய்ச்சி நிலையம் அமைத்தல் பனம் பொருள் கைத்தொழில்கள் கிப்பிச்சுண்ணும்பு தயாரித்தல் சணல் உற்பத்தி கால் நடைவளர்ப்பு, கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலம் அமைத்தல் போன்ற பல திட்டங்கள் பற்றிக் கூட்டத்தில் ஆராயப்பட்டபின் இத்திட்டங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனி குழுக்கள் அமைக்கப்பட்டன.

......

## இடமாற்றங்கள்

வெள்ளவத்தை, செவ்

கொழும்பு கமத்தொழில் ஆக்க ஆணையாளர் காரியாலயத்தில் கடமையாற்றிய திரு. எஸ். வன்னியகுலம் பேராதனை ரஜவத்தையிலுள்ள கமத்தொழில் ஆக்க ஆணையாளர் கிளைக் காரியாலயத்திற்கு இம்மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

கொழும்பு நெடுஞ்சாலைத் திணைக்களத்தின் கணக்குக் கிளையில் கடமையாற்றிய திரு. பூ. த. வேலாயுதபிள்ளை மந்திகையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நெடுஞ்சாலைகள் திணைக்களக் கிளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0


கொழும்பு பேலி வீதியிலுள்ள அஞ்சல் திணைக்கள நிதிக்கணக்குப் பிரிவில் கடமையாற்றிய திருவாளர்கள் எஸ். சிற்றம்பலம், பொ. கனகலிங்கம், வீ. சாமித்தம்பி ஆகியோர் கொழும்பு டியூஜி வீதியிலுள்ள பழைய பார்சல் கட்டிடத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கணக்கிணக்கக் கிளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.


## கையிருப்பில் கிடைக்கும்

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

WALKER-WOLSELEY நீர்ப்பாசன பம்புகள்

* மணிக்கு 10,000 கலன்
* குறைந்த இயக்கச் செலவு
* பராமரிப்புச் சுலபம்



2" பெற்றோல் / மண்ணெண்ணெய் பம்ப்

நீர்ப்பாசன, மற்றும் பொதுவான இறைப்பு வேலைகளுக்கான பிரசித்திபெற்ற நம்பகமான வாக்கர் வூல்ஸ்லி பெற்றோல் / மண்ணெண்ணெய் யந்திரங்கள் இப்பொழுது வாக்கர் இன்டஸ்ரீஸ் (சிலோன்) லிமிட்டெட்டால் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன.

WI வாக்கர் இன்டஸ்ரீஸ் தயாரிப்பு

பக்கபலமான பராமரிப்பு! ஊழியர்களுடன் சகலவித உதிரிப்பாகங்களும்:

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

இல: 37/39, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்

தொடர்பு கொள்க:

திரு. ஏ. பி. ஜோசெப் (மனேஜர்)

தொலைபேசி: 7031


## 'நாடுகடனாளி ஆகிவிட்டது'

மாத்தறை, செவ்

முன்னைய அரசாங்கத்தின் கவனக்குறைவான ஆட்சியால் இன்று எமது நாடு கடனாளியாகப் பிறநாடுகளுக்குப் பெருந்தொகையான பணத்தைச் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளது. இதனால் மக்கள் அரசாங்கம் ஆட்சியைச் செவ்வனே நடாத்தக் கஷ்டப்படுகிறது.

கம்புறுபிட்டியா தொகுதியிலுள்ள கரகொடை கனிஷ்ட வித்தியாலய அதிபரின் பிரியாவிடைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கல்வியமைச்சின் உதவி அமைச்சர் திரு. சி. வை. துடாவை மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- மேற்படி துரதிஷ்ட நிலையில் இருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டுமானால் மக்கள் வீணான செலவுகளை யொழித்து விசுவாசத்தோடு நாட்டின் நலனுக்கு உழைக்க வேண்டும் ஆசிரியர்கள் மாணவரது நலனிலும் பாடசாலைக்கட்டிடங்கள் தளபாடங்கள் ஆகியவற்றைப் பேணுவதிலும் கூடியகவனம் செலுத்தவேண்டும்.

அக்குறச ஆட்சிமன்ற அங்கத்தவர் டாக்டர் எஸ் ஏ. விக்கிரமசிங்க, வணக்கதுனலிய இந்திராக்னதேரோ உட்படப் பலர் இவ்வைபவத்தில் உரையாற்றினர்.

......

## உடுப்பிட்டி அபிவிருத்தி சபை

உடுப்பிட்டி, செவ்

உடுப்பிட்டிக்கிராமசபைப் பகுதியில் அபிவிருத்திச் சபை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது இக்கூட்டத்தில் மரவரி முறையை ஒழிக்கக்கூடாதென்றும் பனங்கள்ளை விஞ்ஞான முறையில் போத்தலில் அடைத்து விநியோகம் செய்யலாமென்றும் புழுக்கொடியலைப் பக்கெற்றில் அடைத்தும் பாணிப்பினாட்டைப் போத்தலிலடைத்தும் விற்பனைசெய்யலாமென்றும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. பனங்கட்டி உற்பத்தி சம்பந்தமாகவும் கருத்துவழங்கப்பட்டதுடன், பாய்பெட்டி, நார்ப்பெட்டி, தூக்குப்பை, வெங்காயக்கூடு ஆகியபொருட்களைச் சிறுகைத்தொழில்கள் மூலம் உற்பத்திசெய்யலாமென்றும் இதனால் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்குமென்றும் முடிவுசெய்யப்பட்டது.

......

## யூபிலி விழா

பண்டத்தரிப்பு, செவ்

மரியாயின் சபை ஆரம்பிக்கப்பட்ட 50-ம் வருட பொன் யூபிலி விழா கொழும்பு புனித சூசையப்பர் கல்லூரியில் ஏப்ரல் மாதம் 23, 24, 25-ம் திகதிகளில் கொண்டாடப்படவிருக்கிறது. சொற்பொழிவு கண்காட்சி, படக்காட்சிகள் பனவற்றின் மூலம் மேற்படி சபை உலகின் பல இடங்களிலும் செய்துவரும் சேவைகள் எடுத்துக்காட்டப்படும்.

— —

## ச. ச. நிலைய சமாஜக் கூட்டம்

நெடுங்கேணி, செவ்

வவனியா மாவட்ட சன சமூக நிலைய சமாஜத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி வவனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

ஒவ்வொரு கி. சபைப் பகுதிகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட சன சமூக நிலைய பிரதிநிதிகள் 38 பேரும் ... பவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

# "பாடசாலையில் சோஷலிசக்கல்வி வேண்டும்"

—எம். ஸி.

யாழ்ப்பாணம், புதன்

அபிவிருத்தியடையும் ஒரு நாட்டின் சமுதாயப் பாகுபாடுகள், சமுதாயத்திற்கு ஒருவர் பயன்படும் வகையில் திருத்தியமைக்கப்படுகிறது. சமுதாயத்திற்கு ஒருவரால் ஏற்படும் நன்மை அவருடைய கல்வியால் தீர்மானிக்கப்படுகிறது. எனவே சமூக ஏற்றத்தாழ்வுகளைச் சீர்படுத்துவதாயின் எங்கள் பாடசாலை போன்ற பாடசாலைகள் விருத்தியாக்கப்பட்டு பெரும் பாடசாலைகளின் தரத்திற்கு சமன் படுத்தப்படவேண்டும். பெரிய பாடசாலைகள் கல்வி இலாகாவினதும், சமுதாயத்தினதும் செல்லப்பிள்ளைகள்போலுள்ளன. இதனால் எமது சமுதாயத்துக்கும், தேசத்திற்கும் சிறந்தசேவை செய்ய விரும்பும் எங்கள் கனவு நனவாக முடியவில்லையே என ஏங்குகின்றோம். எமது இந்த ஏக்கத்தைப் போக்கும் வகையில் மக்கள் அரசாங்கம் உதவவேண்டும்'. சேணிய தெரு மகாவித்தியாலயப் பெற்றோர் ஆசிரிய சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய மேற்படி வித்தியாலய அதிபர் திரு எம் பாஸ்கரதேவன் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் நியமன எம் பி திரு எம் சி சுப்பிரமணியம் பேசியதாவது: 'நான் இம் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவன் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். சாதாரண தொழிலாளர், பாட்டாளி மக்களது பிள்ளைகள் கல்வி பயிலும் இம் மகா வித்தியாலயத்தின் தரத்தை உயர்த்துவதில் எல்லா உதவிகளையுஞ் செய்துதருவேன். மக்கள் அரசு எமக்கு அந்நியமானதல்ல. எமது குறைகளைத் தீர்த்து வைக்குமாறு உரிமையுடன் அரசை நாம் வற்புறுத்த முடியும்

கல்விக்கூடங்களில் மனிதனை மனிதன் சுரண்ட எண்ணாத சோஷலிச நெறியை மாணவர்களுக்கு கற்பிக்கவேண்டும்.

# 'பிரெஞ்சு மொழி கற்க வசதி செய்ய வேண்டும்'

யாழ்ப்பாணம், புதன்

தமிழ் மாணவர்களுக்கு பிரெஞ்சு மொழியைப் போதிப்பதற்கு ஒழுங்குகளைச் செய்து தருமாறு கல்வி அமைச்சரைக் கோரும் பிரேரணையொன்று இம்மாதம் 16ந் தேதி நடைபெறவிருக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபையின் கூட்டத்தில் கொண்டுவரப்படவிருக்கிறது

மேயர் திரு ரி எஸ் துரைராஜா தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் திரு என் ரி செல்வத்துரையினால் பிரேரிக்கப்படும் இப் பிரேரணையின் விபரம் வருமாறு: நவீன ஐரோப்பிய மொழிகளை எமது பாடசாலை மாணவர்களுக்கு போதிக்க மக்கள் அரசாங்கம் செய்திருக்கும் முடிவைப் பாராட்டி வரவேற்கும் இம்மன்றம் நகரில் உள்ள பிரபல பாடசாலைகளில் எமது மாணவர்களுக்குப் பிரெஞ்சுமொழியையும் படிப்பிப்பதற்கேற்ற ஒழுங்குகளை விரைவில் செய்து தரும்படி கல்வி அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறது.

திரு ரி கே இராசரத்தினம் கீழ்க்காணும் பிரேரணையைக் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார். யாழ்ப்பாணப் பகுதியில் நிலவும் போக்குவரத்துச் சீர்குலைவுகளால் மாணவர்கள் பெரும்பாலும் பொதுமக்கள் வாகனமான சைக்கிள் வண்டிகளில் இருவர் இருவராக பிரயாணம் செய்கின்றனர். சட்டத்தை மீறும் செயலாகவிருப்பினும் போக்குவரத்துச் சேவைகள் சீராகுமட்டும் இது தொடரவே செய்யும். எனவே ஒரு ஐந்துவருட காலத்துக்குப் பரீட்சார்த்தமாக சைக்கிள் வண்டிகளில் ஏககாலத்தில் இருவர் பிரயாணம் செய்வதைப் பஸார் வட்டாரம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் அனுமதிப்பதென்றும் அதற்கு வேண்டிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதெனவும் இம்மன்றம் தீர்மானிக்கிறது.

# சிறு கைத்தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமா?

கோட்டை, செவ்

இருபது சிறுகைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு அபிவிருத்திச்சபைகள் அங்கீகாரம் வழங்கியுள்ளது. படகுகட்டுதல். இஞ்சி எண்ணை மரவள்ளிப் பொருட்கள் தயாரித்தல் பழவகைகளைப்பாதுகாத்தல் போன்ற சிறுகைத்தொழில்களை ஆரம்பிப்பவர்களுக்கு உதவிவழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உள்நாட்டில் கிடைக்கும் மூலப்பொருட்களை உபயோகித்து ஆரம்பிக்கக் கூடிய கைத்தொழிலில் முதலீடு செய்ய விரும்புபவர்களை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினருடன் உடனடியாக தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு வேண்டிய யந்திரங்களை இறக்குமதிசெய்ய இச்சபை சகல உதவிகளையும் வழங்கும். கைத்தொழிலை ஆரம்பிப்பவர்கள் ...லட்சம் ரூபா முதலீடு செய்யவேண்டும்.

கைத்தொழில் அபிவிருத்திச் சபை அனுமதி வழங்கியுள்ள சிறுகைத்தொழில்கள் பற்றிய விபரம் வருமாறு:-

குழந்தைகளின் உடுப்புக்கள், பருத்தி ஜவுளிகளுக்கு வர்ணம் அச்சடித்தல், சிமெந்துப் பொருட்கள், படகுகட்டுதல், பழவகை பாதுகாத்தல், ஜவுளிகள் உற்பத்தி, மினகுஎண்ணெய் மரவள்ளிப் பொருட்கள், நூல் சிட்டம் வரையறுக்கும் இயந்திரம், கடுகுஎண்ணெய் காற்றில் இயங்கும் லாம்புகள் 'மான்டில்கள்', பிரம்பு பொருட்கள், றப்பர் சேர்க்கப்பட்ட தும்புப் பொருட்கள், இத்துள்பனங்கட்டி றப்பரினாலான விளையாட்டுப்பொருட்கள் இத்துள் பனங்கட்டி றப்பரினாலான வேறுபொருட்கள் களிமண்கற்கள், சாதிக்காய் எண்ணெய், இஞ்சி எண்ணெய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள எழுத்தாளருக்கு இன்று வரவேற்பு

யாழ்ப்பாணம், புதன்
சிங்கள எழுத்தாளர் ஐவர் நாளை யாழ்ப்பாணம் வருகின்றனர். கலை இலக்கிய பெருமன்றத்தின் அழைப்பை ஏற்று இன்று இங்குவரும் சிங்கள எழுத்தாளர்களைக் கௌரவிக்குமுகமாக யாழ்ப்பாண மாநகரசபை மண்டபத்தில் அன்றைய தினம் மாலை இலக்கியக் கூட்டம் ஒன்று நடைபெறும்.

டாக்டர் த. வாமதேவன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பிரபல நாவலாசிரியர் திரு கே. ஜெயதிலகா, விமரிசகர் டாக்டர் ரோஹணதீர, எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு. குணசேனவிதான, கவிஞர் பத்திரிகாசிரியர் திரு ஸ்ரீலால் கொடிகார, சிறுகதை எழுத்தாளர், விமரிசகர் திரு அபேசிங்ஹ ஆகிய ஐவரும் கௌரவிக்கப்படுவர். இதில் நியமன எம். பி. திரு. எம். சி. சுப்பிரமணியமும் கலந்து கொள்வார்

# வடமராட்சி ஆசிரிய சங்க பேச்சுப் போட்டி முடிவு

பருத்தித்துறை, செவ்
வடமராட்சி ஆசிரியர்சங்கம் இவ்வாரம் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரிமண்டபத்தில் நடத்திய ஆங்கில தமிழ் பேச்சுப் போட்டி முடிவுகள் வருமாறு:

தமிழ்ப் பேச்சுப்போட்டி ஆண்கள்:

கீழ்ப் பிரிவு: வீ சந்திரகுமார் புட்டளை ம வி எம். தவராசா கரவை விக்னேஸ்வரா, பி யோகநாதன் விக்னேஸ்வரா.

மத்திய பிரிவு: ஆர் நரேந்திரன் ஹாட்லி, எம் வின்சர் கோமகன் ஹாட்லி, என் இராமநாயகம் ஹாட்லி.

மேற்பிரிவு: ரி சுந்தரலிங்கம், ஞானசாரியார். கே தர்மபதி, ஹாட்லி, ரி சிறிஸ்கந்தராசா. விக்னேஸ்வரா.

அதிமேற்பிரிவு: எஸ் நடராசா, சிதம்பரா, என் சிவகுமார், ஹாட்லி, எம் தயாபரன், ஹாட்லி.

தமிழ்ப் பேச்சுப்போட்டி: பெண்கள்:

கீழ்ப் பிரிவு: ரி ரமணி, மெதடிஸ்ட், எஸ் ரூபராணி உடுப்பிட்டிமகளிர். கே முருகேசு லதா, மெதடிஸ்ட்.

மத்திய பிரிவு: எஸ் நகுலேஸ்வரி, மெதடிஸ்ட், எஸ் சாந்தினி, உடுப்பிட்டி மகளிர், கே கௌரி, வட-இந்து மகளிர்.

மேற்பிரிவு: ஏ நளினி சாந்தி, மெதடிஸ்ட், எஸ் பாக்கியம், உடுப்பிட்டி மகளிர், கே குலராணி, உடுப்பிட்டி மகளிர்.

அதிமேற்பிரிவு: கே சாந்தலக்ஷ்மி, வட இந்து மகளிர் வி மகேஸ்வரி, வட இந்து மகளிர், எஸ் தமிழரசி, வட இந்து மகளிர்.

ஆங்கிலப் பேச்சுப்போட்டி ஆண்கள்:

கீழ்ப்பிரிவு: பி யாதவன் ஹாட்லி. ஆர் இராசசீலன், ஹாட்லி, கே இரத்தினராசா, ஹாட்லி.

மத்திய பிரிவு: ஜே ஜெயசீலன், ஹாட்லி, எஸ் மனோகரன், ஹாட்லி, என் திருச்செல்வநாதன், ஹாட்லி.

மேற்பிரிவு: ஆர் உருத்திரராசா, ஹாட்லி, ஜி டி எம் குலசிங்கம், ஹாட்லி, எஸ் மனோரஞ்சன், ஹாட்லி

அதிமேற்பிரிவு: என் சிவகுமார், ஹாட்லி, ஏ ஜி போ. ஹாட்லி.

ஆங்கிலப் பேச்சுப்போட்டி பெண்கள்:

கீழ்ப் பிரிவு: ஏ அலோமா, மெதடிஸ்த மகளிர், எஸ் மங்களகுமாரி, மெதடிஸ்ட், எஸ் ரூபவாணி, உடுப்பிட்டி மகளிர்.

மத்திய பிரிவு: ஏ ராஜகுமாரி, மெதடிஸ்ட், ரி ரஞ்சினி, உடுப்பிட்டி மகளிர், ஆர் தர்சினி, மெதடிஸ்ட்.

மேற்பிரிவு: எஸ் சிவாஜினி வட-இந்து மகளிர், எஸ் மாலினி, மெதடிஸ்ட், எஸ் மஞ்சுளாதேவி, மெதடிஸ்ட்

## இ.போ.சவில் நாசவேலை

கோட்டை, செவ்
இலங்கைப் போக்குவரத்து சபையின் ஊழியர்கள் சிலர் நாசவேலைகளில் ஈடுபட்டுள்ளனர் மிதிபலகைப் பிரயாணத்தை சபைக்கு வெற்றியீட்டிக் கொடுத்த பின்னர் சில ஊழியர் பஸ்களின் எண்ணெய்தாங்கிகளில் மென்மையான பஞ்சு போன்ற பொருட்களை வைத்து எண்ணெய் போவதைத் தடைசெய்கிறார்கள். இதனால் பஸ் வண்டிகள் இடையில் ஓடமுடியாமல் நின்றுவிடுகின்றன.

இதை இ. போ சபையைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் இந் நாசவேலை குறித்து தெரிவிக்கையில் கடந்த சில நாட்களில் 20 பஸ் வண்டிகள் எண்ணெய் குழாய்கள் செயல்பட இயலாமல் நிறுத்துவதற்காக விடப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

இந்த நாச வேலைகளை ஒழிப்பதற்கு விசேஷ பாதுகாப்பு எடுக்கப்படுகிறதெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்'

......

## தேர்தல் கைகலப்பில் 13 பேர் காயம்

சென்னை, மார்ச் 9
தமிழ் நாட்டில் நேற்று நடைபெற்ற தேர்தலின் போது சில இடங்களில் சில அசம்பாவிதங்கள் நடைபெற்றுள்ளன. கடலூரில் வாக்களிப்புத் தொடங்கிய 2 மணிநேரத்துக்குள் 30சதவீத மானோர் வாக்களிப்புச் செய்தனர். நெய்வேலிப் பகுதியில் தான் பெரும்பாலான மக்கள் வாக்களித்துள்ளனர், இப்பகுதியின் 90 வீதசதமானோர் வாக்களித்துள்ளனர்.

கடலூரில் அபேட்சகரின் பிரதிநிதி ஒருவர் அச்சாவடியிலுள்ள தேர்தல் அதிகாரி மீது குற்றஞ் சுமத்தியதால் அவ்வதிகாரி உடனடியாக மாற்றஞ் செய்யப்பட்டார்.

மதுரையில் இருபகுதியினருக்கிடையே கலகம் ஏற்பட்டதை அடுத்து வாக்களிப்பு இரண்டு மணிநேரம் ஒத்திவைக்கப்பட்டது. இக் கைகலப்பில் 13 பேர் காயமடைந்தனர்.

## பனையில் அக்கறை

மாவிட்டபுரம், செவ்
"பலவிதமானவர்கள் எமது நாட்டை ஆண்டுவந்தார்கள். ஆனால் வடபகுதியில் உள்ள மூலப்பொருளான பனம்பொருளைக் கொண்டு எந்தவிதமான தொழிற்சாலைகளையும் ஆரம்பிக்க முன்வரவில்லை, ஆனால் இன்றைய அரசாங்கம் இம் முயற்சியை மேற்கொண்டுள்ளது. இதற்கு மக்கள் ஆதரவு அளிக்கவேண்டும்.

இவ்வாறு நவிண்டில் அம்பாள் சனசமூக நிலைய முதலாவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு பேசிய அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபை நிர்வாகக்காரியதரிசி திரு. சி. செல்லையா கூறினார்.

## பயிர்ச்செய்கை பன்முகப் படுத்தப்படும்

கோட்டை, செவ்.
விளைச்சல் குறைவான தோட்டங்களில்பயிர்ச் செய்கையைப் பன்முகப்படுத்த தோட்டத்தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

தேயிலைறப்பர் ஆகிய பயிர்கள் சில தோட்டங்களில் நல்ல வருவாயைத் தருவதில்லை. அத்தகைய தோட்டங்களை அரசாங்கம் துண்டு துண்டாக்கி கிராமப்புற விவசாயிகளுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளது. இத்தகையதோட்டங்களில் பயிர்ச் செய்கையைப் பன்முகப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பயிர்ச்செய்கையைப் பன்முகப்படுத்துவதற்காகத் தோட்ட தொழில் அமைச்சு கண்டி கேகாலை மாத்தளை ஆகிய இடங்களில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் ஆய்வுவேலைகளை மேற்கொண்டுள்ளது இவ்வாய்வு வேலைகள் ஐ நா உணவு ஸ்தாபனத்தின் உதவியுடன் நடைபெறுகிறது.

## 'புகையிலை மூலம் பொருளாதாரம் வளர்ப்போம்'

உடுப்பிட்டி, திங்கள்
"இன்றைய சூழ்நிலையில் இலங்கை பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ளது. இளைஞர்கள் நினைத்தால் ஈழத்தை வளம்கொழிக்கும் நாடாக்கலாம். வாலிபர்களின் முயற்சியினாலும், ஊக்கத்தினாலுமே கிராமங்களை முன்னேற்றமுடியும். எமது பகுதிகளில் பெறக்கூடிய மூலப்பொருட்களைக் கொண்டு சிறு கைத்தொழில்களை உருவாக்குவதால் வேலைவாய்ப்புப் பெறுவதோடு பொருளாதார அபிவிருத்திக்கும் உழைக்கமுடியும்" என கரணவாய் கரவெட்டி வாலிபர்களைக் கொண்ட இளைஞர் அபிவிருத்தி இயக்க அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் திரு.செ.சுவாமிநாதர் கூறினார்.

இப்பகுதிகளில் புகையிலைப் பயிர் உற்பத்தி அமோகமாக நடைபெறுவதால் சுருட்டுத் தொழிற்சாலைகளை நிறுவி அதன் மூலம் இவ்விளைஞர் அபிவிருத்திஇயக்கம் சிறந்த தொண்டாற்ற முடியுமென்றும் பனம் பொருள் உற்பத்திக்கும் அமோக ஆதரவு அளிக்க வேண்டுமென்றும் அவர் சொன்னார்.

திருவாளர்கள் செ. சிவஞானசுந்தரம், ஜே ஜெயக்குமார், சி. தியாகேஸ்வரன், பாலாகுமரேசு, கண.மகேஸ்வரன் உட்பட வேறுபலரும் பேசினர்.

ஒவ்வொரு வட்டாரத்திலும் சிரமதானப பணிகள் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## மரக்கறி பதனிடு தொழிற்சாலை

கண்டி, செவ்.
கண்டிப் பகுதியில் மரக்கறி பதனிடும் தொழிற்சாலையொன்றை நிறுவவேண்டும் என கண்டிப் பகுதியில் உள்ள அரசாங்க சார்பு எம். பி.க்கள் தீர்மானித்துள்ளனர்

மரக்கறி வகைகள் கிடைக்காத பருவங்களில் ஏற்படும் மரக்கறித் தட்டுப்பாட்டை நீக்குமுகமாகவே மேற்படி எம். பிக்கள் பெருந்தொகையாக மரக்கறி வகைகள் பயிரிடப்படும் இடமான கண்டிப்பகுதியில் மரக்கறி பதனிடும் தொழிற்சாலை ஒன்றை நிறுவவேண்டும் என ஆலோசனை நடத்தியுள்ளனர். [illegible] கள் ஆலோசனையை அரசாங்கத்துக்கும் தெரிவித்துள்ளார்கள்.

'ஏ' பிரிவு உதைபந்தாட்டம்:

# புனிதவளன், அன்ரனிஸ் கழகங்கள் வெற்றி

யாழ்ப்பாணம், புதன்
யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின், 'ஏ' பிரிவுகளிடையே நடாத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் சில வருமாறு:

### புனிதவளன் வெற்றி

யாழ்ப்பாண புனிதவளன் விளையாட்டுக் கழகத்துக்கும் சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் புனிதவளன் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆரம்பத்தில் புனிதவளன் கழகம் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டது. இதைத் தொடர்ந்து சென். மேரிஸ் கழகத்தினருக்குக் கிடைத்த இரு 'பெனல்டி' உதைகளையும் இவர்கள் நழுவவிட்டனர் இடைவேளையின் போது புனிதவளன் கழகம் 2-0 கோல்களைப் பெற்றிருந்தது.

இடைவேளையின் பின் ஆட்டம் போட்டியாக இருந்த போதிலும் புனிதவளன் மேலும் ஒரு கோலைப் போட்டு 3—0 கோல்களால் ஆட்ட இறுதியில் வெற்றி பெற்றது.

பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகத்துக்கும், கிறீன்பீல்ட் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற கடும் போட்டியில் சென் அன்ரனிஸ் கழகம் வெற்றி பெற்றது.

இப் போட்டியின் ஆரம்பத்தில் இரு கோஷ்டிகளும் கடுமையாகவே மோதின. இடைவேளைக்கு முன்பு கிறீன்பீல்ட் கழகத்தினருக்கு கிடைத்த கோல்கள் போடும் சந்தர்ப்பங்களை இவர்கள் நழுவவிட்டு விட்டனர். இடைவேளைக்கு இரு நிமிடங்கள் இருக்கும் போது சென். அன்ரனிஸ் கழகத்தின்வலது முன்னணி வீரர் திடீரென ஒரு கோலைப் போட்டார்.

இடைவேளையின் பின்பும் இரு கோஷ்டிகளும்ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் விளையாடிய போதிலும், சென். அன்ரனிஸ் கழகத்தின் இடது முன்னணி வீரர் இரண்டாவது கோலைப் போட்டு 2—0 கோல்களால் கிறீன்பீல்ட் கழகத்தை தோற்கடித்தனர் கிறீன்பீல்ட் கழகத்தின் பின்னணி வீரர்களின் ஆட்டம் சிறப்பாக இருந்தது.

யாழ் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. பேரின்பநாயகம் மத்தியஸ்தம் வகித்தார்.

(தே நி)

# 'மனிதாபிமானத்துடன் ஆசிரியர் செயற்படவேண்டும்'

உடுவில், செவ்வாய்
"ஆசிரியத் தொழில்மகத்தானது. எதிர்கால சந்ததியை நல்லபடியாக உருவாக்கும் பொறுப்பு மிக்க தொழில் அது. தங்களுடைய கடமையை ஆசிரியர்கள் பொறுப்புடனும் மனிதாபிமான முறையிலும் அணுகி செயற்படவேண்டும். பழைய காலத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி போன்ற பெரிய கல்லூரியில் ஆசிரியர்கள் தங்கள் பொறுப்புக்களை மனிதாபிமான முறையில் திறம்பட செயற்படுத்தி வந்ததனால் தான் பெரிய அறிவாளிகள் பலரை அங்கிருந்து உருவாக்க முடிந்தது"

மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர்களாக கடமையாற்றி இளைப்பாறியுள்ள திருவாளர்கள் வி ஜி சம்பந்தன், எஸ் சுவாமிநாதஐயர். பி ஆர் அரியபூஷணம், பண்டிதர் எம் கதிரவேலுப்பிள்ளை, திருமதி மேதர் ஆகியோருக்கு மேற்படி பாடசாலை பழைய மாணவர் சங்கம் அளித்த பிரியாவிடை விழாவில் பேசிய முன்னாள் அதிபர் திரு வி ஜி சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி விழாவிற்கு மெமோறியல் வித்தியாலய பதில் அதிபர் திரு டபிள்யூ ஞானசிகாமணி அன்னப்பா தலைமைவகித்தார்

விழாவில் திரு எஸ் துரைசிங்கம் ஜே பி ஆசிரியர் கே திருநாவுக்கரசு மற்றும் செல்வன் கே தெய்வேந்திரன், செல்வி எஸ் கீதா உட்பட பலர் ஆசிரியர்களின் சேவையை பாராட்டிப் பேசினர் இளைப்பாறிய ஆசிரியர்கள் தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு தனித்தனி நன்றி செலுத்தினர்

## மத்தியகல்லூரி இன்னிங்ஸால் வெற்றி

யாழ்ப்பாணம், புதன்
யாழ் மத்திய கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில், யாழ் மத்திய கல்லூரி இன்னிங்ஸால் வெற்றி பெற்றது.

இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது

(தே நி)

......

## இளைஞர்களுக்கு பாராட்டு

மாவிட்டபுரம், செவ்
"எதனையும் சாதிக்க முடியும். இச்சபை இளைஞர்களுக்குச் சமயம், கலை, முதலியவற்றில் அறிவூட்டி வருகின்றது. இச்சபை ஸ்தாபகர் திரு. சிவகடாச்சக்குருக்கள் மறைவு ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும். இருபத்தைந்து ஆண்டுகள் நல்ல சபையாக நடைபெற்றிருக்கின்றது. அதற்கு முன்னரும் ஸ்தாபகர் இளைஞர்களுக்காகப் பல வகுப்புக்கள் நடத்தியுள்ளார். நமது கிராமத்து இளைஞர்கள் சிரமதான மூலம் பெரும் சாதனைகள் புரிந்துள்ளார்'

இவ்வாறு இளைப்பாறிய ஓவசியர் திரு. ஆ. கனகசபை தெல்லிப்பளை பாலர் ஞானோதய சபையின் இருபத்தைந்தாவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை வழங்குகையில் குறிப்பிட்டார்.

திரு. ரி. சுந்தரமூர்த்தி தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் மற்றும் பலரும் உரையாற்றினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாட்டில் இன்று வாக்குகள் எண்ணப்படும்

## கூட்டங்கள், ஊர்வலங்கள் நடாத்த 19 வரை தடை!

சென்னை. மார். 9

தமிழ் நாட்டில் பல இடங்களில், ஊர்வலங்களோ கூட்டங்களோ நடத்தக் கூடாதென பொலிஸார் நேற்றுமுதல் தடைஉத்தரவு பிறப்பித்துள்ளனர். இந்தத்தடை உத்தரவு இம்மாதம் 19-ம் தேதிவரை நீடிக்கும்.

தமிழ் நாட்டில் நாளை புதன் கிழமை வாக்குச்சீட்டுக்கள் எண்ணப்படும் வாக்குச் சீட்டுகள் எண்ணப்படும் இடங்களுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

சென்னை, மதுரை செங்கல்பட்டு கோயம்புத்தூர் கன்னியாகுமரி தஞ்சாவூர் வடஆற்காடு தென்ஆற்காடு ஆகிய இடங்களில் 144 தடை உத்தரவு போடப்பட்டுள்ளது.

கப்பம் என்ற கிராமத்தில் உள்ளபெரியகுளம் என்றஇடத்தில் இரு கட்சியினருக்கிடையில் நேற்று ஏற்பட்ட மோதலில் 2 பொலிஸார் உட்பட 13 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மதுரைமாவட்டத்தில்தேர்தல்தினத்தன்று பொதுமக்கள்ஒழுங்காகநடந்துகொண்டதை பாராட்டிபொலிஸார் ஊர்வலம் ஒன்றை நேற்று நடத்தினார்கள் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் போதும் பொதுமக்கள் ஒழுங்காக இருக்க வேண்டுமென பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தஞ்சாவூரில் சிண்டிகேட் காங்கிரஸ் கட்சி ஆதரவாளரான நிருபர் ஒருவர் பலமாகதாக்கப்பட்டுள்ளார் சம்பவம் நடந்த இடத்திற்கு பொலிஸார் வந்ததும் தாக்குதல் நடத்திய கோஷ்டியினர்ஓடிவிட்டனர்பொலிஸார் நிருபரை ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். இது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் பொலிஸார் மூன்று பேரைக் கைது செய்துள்ளனர்.

இடைத்தேர்தலை அடுத்து தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ்கட்சிகமிட்டியை உடனடியாக கூட்டும்படி 50 உறுப்பினனைர்கள்கோரியுள்ளனர் திருவெண் ணமலை வேட்பாளரான பொன்னுச்சாமி இத்தகவலை தெரிவித்துள்ளார்.

தேர்தலில் வெற்றிபெறும் வேட்பாளர்கள் தேர்தல் செலவு கிளை உடனடியாக அறிவிக்க வேண்டுமென்றும் அறிவிக்க தவறுனால் பதவிகளை இழக்க வேண்டிய நிலைமை ஏற்படுமென்று தேர்தல் அதிகாரி நேற்று அறிவித்தார்.

சென்னை நகரத்தில் வாக்களிக்காத வசதி கிடைக்காமல் போனவர்களின்பட்டியல்களை தி. மு. கழக தொண்டர்கள் சேகரித்துவருகின்றனர் வாக்களிக்காத வாக்காளரின் பெயர் விலாசம் வயது ஆகிய விபரங்களை சேகரித்து வருகின்றனர்:

தமிழ் நாடுமுழுவதும் நேற்றுமுதல் பலத்த பொலிஸ் பாதுகாப்புபோடப்பட்டுள்ளது.

## மாசிமகத் ...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அயிராணி திலகமணித்
தழகு செய்ய
திருமகளும் நாமகளும்
சவரிவீச
திலோத்தமை யூர்வசி
திருத்தஞ் சிலப்பிற்
செய்ய
வடுவுசப்த மாதர்களும்
மருங்கு சூழ்ந்து
மங்களங்கள் எடுத்தோத
வானோர் ஏத்த
வரமருளிச் செந்நெல்
வளம் நிகழும் கோவில்
வயலில் மகா மாரியம்மே
யாடீரூஞ்சல்

நாளை மாசிமகத் தினத்தன்று மாலை மின்சார தீபங்களினால் அலங்கரிக்கப்பட்ட மஞ்சத்தில் அம்பாள் எழுந்தருளி புங்குடுதீவு சந்தையடி, முற்றவெளிரோட், குறிச்சிக்காடு ஆலடிச்சந்தி, கலட்டி விநாயகர் ஆலயம், கண்ணகை அம்மன் ஆலயம், கோட்டைக்காடுரோட், ஆஸ்பத்திரியடி, 2 3 4-ம் வட்டாரங்கள் காளிகா பரமேஸ்வரி ஆலயம், பிரதானவீதி, கந்தசாமி கோவில். சிவன் கோயில், முதலாம் வட்டாரமூடாக ஊர்வலம் செல்லுவார். மூ. இராமலிங்கம்

இப் பத்திரிகை "ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு மார்ச் மாதம் 10-திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

பருத்தித்துறை—யாழ்.

## கடுகதி பஸ் பிரயாணிகளை ஏற்றுமலே செல்கிறதாம்!

யாழ்ப்பாணம். புதன்

பருத்தித்துறையிலிருந்து உடுப்பிட்டியூடாக யாழ்ப்பாணம் செல்லும் காலை 7-45 மணி கச்சேரி கடுகதி பஸ் இம்மாதம் 7-ம் திகதி வல்வெட்டித்துறைபொலிஸ் நிலையத்துக்கு அருகாமையிலுள்ள பஸ்தரிப்பில் நிறுத்தாமல் சென்றுவிட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது. இதனால் கச்சேரிக்கும் மற்றும் தொழில்களுக்கும் செல்லும் பிரயாணிகள் நேரத்துக்கு வேலைக்குச் செல்ல முடியாது சிரமங்களுக்குள்ளானார்களாம்.

யாழ்ப்பாணம் இ. போ. ச. தலைமை அலுவலகத்திற்கு கச்சேரியில் வேலை செய்யும் திரு. கே. பத்மநாதன் என்ற தினப் பிரயாணி ஒருவர் இதுசம்பந்தமாகச் செய்துள்ள புகாரில் அன்றையதினம் குறிப்பிட்ட பஸ் குறிப்பிட்ட பஸ் தரிப்பில் நிறுத்தாமல் நூறு யார் தள்ளி சில பிரயாணிகளை இறக்கிவிட்டு ஒரிருவரை ஏற்றிச் சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார். இதனால் வேலைக்கு செல்ல முடியாத நிலைகூட ஏற்படுவதாகவும் இப்படியான பல சம்பவங்கள் முன்னர் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்,

## விஸ்வமடுவில் காணி வழங்கப்படும்

நல்லூர், செவ்

யாழ். மாவட்டத்தில் படித்தும் வேலையற்றிருக்கும் விவாகமாகாத 18-30 வயதுக்குமிடைப்பட்ட வாலிபர்களிடமிருந்து பரந்தன் முல்லைத்தீவு வீதியில் 12 மைல்களுக்கப்பால் உள்ள விசுமடுக்குளம் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தில் அமைந்துள்ள விசுவமடுக் குளத்தில் 3 ஏக்கர் காணி கொடுப்பதற்கு யாழ். அரசாங்க அதிபரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்படும் வாலிபர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து காடுகளை அழித்த பின்பே அரசாங்கம் காணிகளைப் பிரித்துக் கொடுக்கும். வாலிபர் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 2 ரூபா உதவிப்பணமாக வழங்கப்படும். விண்ணப்பங்கள் இம்மாதம் 31-ம் திகதிக்கு முன்னராகவே யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

—

## எச்சரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் 14-ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் க. பொ. (சாதாரண) பரீட்சைக்காலத்தில் சில தீவிர சக்திகள் பரீட்சையைக் குழப்ப உத்தேசித்திருப்பதாகவும் பரீட்சை மண்டபங்களுட் புகுந்து கலாட்டா செய்யவிருப்பதாகவும் தமக்குச் செய்திகள் எட்டியுள்ளதாகவும் கூறும் அவசர சுற்றுநிருபமொன்று சகல பரீட்சாதிகாரிகளுக்கும் அதிபர்களுக்கும் கல்வித் திணைக்கள உயர் பீடத்திலிருந்து கிடைத்துள்ளது.

## வைத்தியருக்கு உதவும் புதுமையான கம்யூட்டர்

லண்டன், மார்ச் 9

வைத்தியசாலைகளில்வைத்தியரின் சேவையை, நாடிச் செல்லும் நோயாளிகள் தொகை மிகவும் அதிகம். ஒருநாளில்பல தொகையான வெவ்வேறு வியாதிகள்உள்ள நோயாளிகளைப் பரிசோதிக்கிறார் ஒரு வைத்தியர். இவர்கள் பலரினதும் நோய்களும் அதன் குணங்களும், அதற்களிக்கப்பட்ட மருந்து, சிகிச்சை வகைகளும் பொதுவாக ஒரு அட்டையில் குறிக்கப்பட்டு இதற்கென வைத்தியசாலையில் இருக்கும் குறிப்பேடுகள் அறையில் வைக்கப்படுகின்றன குறிப்பிட்ட ஒரு நோயாளி, 2ம் அல்லது 3ம் தடவையாக, வைத்தியரிடம் வரும்போது, அந்நோயாளியைப் பற்றிய குறிப்புகள் அடங்கிய குறிப்பேட்டைப்பார்த்த பிறகேவைத்தியர், மேலும் பரிசோதனை செய்வது வழக்கம்.

நோயாளிவந்ததும், அவரது குறிப்பேட்டைத் தேடி எடுப்பதிலேயே அதிகநேரம் செலவாகிவிடுகிறது. இன்னுமொரு நோயாளியைப் பார்க்கும்நேரம்இதில் வீணாகிவிடுகிறது. இதைத் தடுக்குமுகமாக வைத்தியருக்கு உதவ வந்துள்ளது ஒரு கம்யூட்டர்.

இந்தபுரட்சிகரமான கம்யூட்டர் சகல நோயாளிகளினதும் அந்தரங்கக்குறிப்புகளை தன்ஞாபகசக்தி மிகுந்த மூளையில் பதிவு செய்து கொள்கிறது வைத்தியரின் முன் நோயாளி சென்றதும் தன் குறிப்பேட்டின் இலக்கத்தைச் சொல்லவேண்டும்

வைத்தியர் இன்னொருவரது உதவியை நாடாமல் தன்பக்கத்தே சிறுதிரையுடன் இணைந்த கம்யூட்டரின் விசையை அழுத்த அது அந்நோயாளி பற்றிய சகல தகவல்களையும் அச்சிறுதிரையில் படம்போன்று காட்டிவிடும். வைத்தியர் அதைப் பார்த்துவிட்டு உடனடியாக [illegible] கொண்டு வைத்தியம் செய்ய ஆரம்பிக்கலாம்.

குத்துச் சண்டை

# கிளே தோற்றார்!

## பிரேஸியர் உலக சாம்பியன்

நியுயோர்க். மார்ச் 9

நியுயோர்க்கில் இன்று நடைபெற்ற உலக அதிபாரக் குத்துச்சண்டைப் போட்டியில் 27 வயதுடைய ஜோ பிரேசியர் 29 வயதுடைய முன்னாள் அதிபாரக் குத்துச்சண்டை சாம்பியன் காசியஸ் கிளேயை தோற்கடித்தார்.

உலக குத்துச்சண்டை அபிமானிகள் மிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த உலக அதிபாரக் குத்துச் சண்டைப் போட்டி இன்று காலை 9 மணிக்கு (இலங்கை நேரம்) நியுயோர்க்கிலுள்ள மடிசன் சதுக்கத்தில் ஆரம்பமாகியது 15-வது ரவுண்டில் காசியஸ் கிளேயை ஜோ பிரேசியர் தோற்கடித்தார்.

இருவரும் சிறந்த வெற்றிகளைக் கடந்த காலத்தில் பெற்று வந்திருக்கின்றனர். திரு கிளே இதற்கு முன் 32 போட்டிகளில் ஈடுபட்டு வெற்றி பெற்றார். அவர் அடைந்த முதலாவது தோல்வி இதுவாகும். தனக்கும் பிரேசியருக்குமிடையே நடைபெறும் போட்டி ஒரு சாதாரணமானது தான் அதில் வெற்றி பெறுவது நிச்சயம். என்று அவர் தெரிவித்திருந்தார்.

இந்தக் குத்துச்சண்டைப் போட்டியில், திரு. கிளே 10-வது ரவுண்டிலிருந்தே சோர்வடைந்தவராகக் காணப்பட்டார். இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திய திரு. பிரேசியர் கிளேயின் முகத்தில் மின்னல் வேகத்தில் குத்துக்களை பொழிந்த வண்ணம் இருந்தார். பிரேசியரின் குத்துக்களை தாங்க முடியாமல் கிளே குத்துச் சண்டை மேடையை சுற்றிச் சுற்றி பின்வாங்கிய வண்ணம் இருந்தார். ஈற்றில் 15-வது ரவுண்டில் பிரேசியரின் குத்தை தாங்க முடியாமல் கிளே நிலத்தில் சாய்ந்தார். இந்தப் போட்டியின் போது முன்பு கிளேயிடம் காணப்பட்ட துடிப்பும் சுறுசுறுப்பும் காணப்படவில்லை எனப் பார்வையாளர்கள் தெரிவித்தனர்.

திரு ஜோ பிரேசியர் இதற்கு முன் 26 போட்டிகளில் ஈடுபட்டு எதிலுமே தோல்வியடையவில்லை.

திரு. கிளே 1967-ம் ஆண்டு வியட்னாம் யுத்தத்தில் சேவை புரிய மறுத்ததற்காக சிறைக்கு அனுப்பப்பட்டார்.

இதில் போட்டியிட்ட இருவருக்கும் பரிசாக 250 லட்சம் ரூபா (25 ஆயிரம் டாலர்) கொடுக்கப்பட்டது.

## சமஷ்டி நோக்கு விருந்து

யாழ்ப்பாணம், புதன்

ஊர்காவற்துறை, கரம்பொன் குருமடத்தில் இரண்டாம் வருட குருமட சமஷ்டி நோக்குவிருந்து நாளை பகல் 12 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

......

## இன்று உபசார விழா

யாழ்ப்பாணம், புதன்

யாழ் மாவட்ட சமாதான நீதவானாக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள திரு சபாபதிப்பிள்ளை கந்தசாமிக்கு இன்று மாலை அவரது இல்லத்தில் உபசார விழா நடாத்தப்படவுள்ளது.

மிளகாய்ப் பயிர்ச்செய்கை

## இயக்கம் 12-ம் திகதி ஆரம்பமாகும்

கோட்டை, செவ்

வீட்டுத் தோட்டங்களில் மிளகாய்ப் பயிர்ச் செய்கை பண்ணுவதற்கான தேசிய இயக்கமொன்றை விவசாய காணி அமைச்சர் ஆரம்பித்துள்ளார். இவ்வியக்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் 12ம் திகதி கவர்னர் ஜெனரலினால் தொடக்கி வைக்கப்படும் இதுசம்பந்தமான இன்னோர் அங்குரார்ப்பணக் கூட்டம் பிரதமரால் ஆரம்பிக்கப்படும்,

இவ்வியக்கத்தின் முயற்சியினால் இலங்கையில் 5லட்சம் ஏக்கர் வீட்டுத்தோட்டங்களில் மிளகாய்ச்செய்கை பெறுமென்றும் இதனை ஊக்குமுகமாக பசளைவிதை போன்றவற்றை அரசாங்கம் வழங்குமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று பொங்கல்

யாழ்ப்பாணம், புதன்

இருபாலை வேளாதோப்பு அம்பாள் கோவிலில் மாசிமக விசேட அபிடேகமும் விசேட பூசை ஆராதனை வழிபாடும் இன்று நடைபெறவுள்ளது. ஆலய கூட்டுப்பிரார்த்தனைச் சபையினரும் யாழ் நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரும் அம்பாள் ஆலய சூழலிலுள்ள வீதிகளில் மாலை 6 மணியிலிருந்து திருமுறை வீதி பஜனை நடத்துவர்.

இருபாலை மண்டாக்குளம் நாச்சிமார் கோவில் மாசிப் பொங்கல் விழா இன்று நடைபெறவுள்ளது. விசேட நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன.

## பாவனைப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

இன்றுகாலையாழ்ப்பாணத்திலுள்ள சலவைத் தொழிலாளர் சங்கத் தூதுக்குழு ஒன்று யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகராவிடம் சலவைத் தொழிலுக்குரிய பாவனைப் பொருட்களின் தட்டுப்பாட்டினால் தொழிலைச் சரிவரச் செய்ய முடியவில்லையென்று எடுத்துக்கூறியதை அடுத்தே யாழ் மாவட்ட அதிபர் இந் நடவடிக்கையை எடுத்துள்ளார்.

தூதுக்குழுவினரிடம் அரசாங்க அதிபர் விசாரணையின் பின்னர் சலவைத் தொழில் சம்பந்தப்பட்ட பாவனைப்பொருட்களின்தட்டுப்பாடுபற்றி அரசாங்கத்திடமும் தெரிவிப்பதாகவும் உறுதி கூறியுள்ளார். தூதுக்குழுவில் யாழ்ப்பாணம் சலவைத் தொழிலாளர் யூனியன் தலைவர் திரு எஸ். நடராசா திரு இ நடராசா திரு சுப்பிரமணியம் திரு ஐயாத்துரை ஆகியோர் அங்கம் வகித்தனர்.

......

## ஆட்சேபம்

காலி, செவ்வாய்

சேகுவேராவின் வாழ்க்கையை சித்தரிக்கும் படத்தை திரையிடுவதற்கு அரசாங்கம் தடை விதித்திருப்பதை ஆட்சேபித்து காலி மாநகரசபையில் பிரேரணை ஒன்று கொண்டுவரப்படவிருக்கிறது.

காலி மாநகரசபையைச் சேர்ந்த கும்பல்வெல வட்டார உறுப்பினரான திரு. விஜயாதநாயக்கா இப் பிரேரணைக்கான முன்னறிவித்தலை கொடுத்திருக்கிறார். காலி மாநகரசபையின் அடுத்த கூட்டத்தில் இப் பிரேரணை கொண்டுவரப்படவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org